[illegible]

V. 6 No. 6 9 [illegible] 1938

3L
[illegible]
N33·6·6.
189139

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஹ பிப்ரவரி மீ 9உ [No. 6

12 APR 1933

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 101
2. தமிழ்ப்பாடம் (நளவெண்பா - கலிநீங்குகாண்டம்) 103
3. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 105
4. அப்பர் (64 கலை - வியாகரணம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 106
5. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 5-ம் தசகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 108
6. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 110
7. யாப்பிலக்கணம்—(தொடைவிகற்பம்) வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 112
8. பொதிகை நிகண்டு (இகராதி) S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 114
9. கலித்தொகை (பாலைக்கலி 4.) T. A. கனகசபாபதி முதலியார் 115
10. கதிரைமலைக் காதல் க. வேலுப்பிள்ளை 116
11. வர்த்தமானம் 119

கலாநிலயம்

சொன்னல் விரோதம் 5.

இந்தியச் சட்டசபையில் ஸர் ஹரிசிங் கவர் என்பவர், மாதர்களுக்கு, தம் விவாகத்தை இரத்து செய்துகொள்வதற்கு உரிமைதரவல்ல ஓர் சட்டத்தை நிறுவ முயல்கின்றார். மற்றெல்லாச் சட்டங்களையும் போலவே இந்த விவாக இரத்துச் சட்டத்தினலும் சனங்களுக்கு நன்மைவிளையுமென்றேனுந் தீமைவிளையுமென்றேனும் நாமிங்கு வாதிக்க வரவில்லை. சட்டத்தால் சீர்பெற்ருர் யார்? சீர்பெற்றிருப்பவர்களுக்குச் சட்டங்கள் வேண்டா. கெடுதிக்கு இடமான சட்டங்கள் நிறுவப்பெறுகின்றனவெனினும், அச்சட்டங்களால் சனங்கள் கேடடைவார் என்று பேசுவது பிழை. சனங்கள் வேறெக் காரணத்தாலோ கெட்டிருப்பதாற்ருன் அக்கேடுடைய சட்டங்கள் பிறக்கலாகின்றன என்னும் உண்மையின் இரகசியத்தை, எமர்ஸன் எடுத்துக்காட்டியிருக்கின்றவண்ணந் தேர்ந்துகொள்ள வல்லவர்களாவோமெனின், பிறகு எவ்விதச் சட்டத்திற்கும் அஞ்சுவது மிகையாய்விடும். ஆகையால் ஒரு சட்டத்தின் நன்மை தீமைகளைப் பற்றிச் சிந்திப்பதெல்லாம் வீண்.

மற்று, இத்தகைய சட்டங்கள் நிறுவவேண்டி முயல்கின்றவர்கள், நலமுந் தீதும் தேர்ந்துகொள்ளத் தகுந்த கல்வியும், கற்றதை ஆராயவேண்டும் என்னும் நோக்கமும், ஆராயவல்ல அறிவும், ஆராய்ந்து மற்றவர்க்கு நன்மை செய்யவேண்டுமென்னும்நல்லெண்ணமும் உடையவர்களாயிருப்பாராயின், உலகத்துச் சிந்தனையாளர்தம் உரைகளை உட்கொண்டு, அதற்கு மாருய்த் தாமொன்று செய்ய நினைப்பதன்முன் அவ் வறிவாளிகள்தம் மொழிகளின் உண்மை எவ்வகையில் வழுக்குற்றதென்று காட்டுவதைக் கடமையாகக் கொள்ளவேண்டுமன்ருே. சென்னையில் தற்காலம் எழுந்தருளியிருக்கும், ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஒரு உபந்நியாசத்தில், மணவாழ்க்கையின் வண்ணத்தைப்பற்றியும் விவாகத்தின் தத்துவத்தைப்பற்றிப் பின்வருமாறு மொழிந்திருக்கின்ருர்:—

"பாதிவிரத்தியம் என்பது பதிக்குத் துரோகம் பண்ணுமலிருப்பது மட்டுமன்று. பரமேச்வரனே இப்படி வந்திருக்கின்ருன், அவரிடத்தி லெப்படி யிருக்கவேண்டுமோ அப்படியே யிருக்கவேண்டும். அந்தவந்தச் சித்தத்திற்கு எப்படியிருக்கவேண்டுமோ அப்படியப்படி யிருக்கவேண்டும். நமக்கென்றொன்று எதற்கு? நிழலைப்போல் அந்த மனஸை யனுசரித்து நாம் நடக்கவேண்டும். நமக்கு வேறு காரியமில்லை. ப்ரம்மசரியத்தில் குருவினிடத்தில் இருப்பதுகூட அவ்வளவில்லை. ஆத்ம வித்தைக்குக் குரு வேறு இருக்கின்ருர். ஸ்திரீகளுக்கோ அப்படியில்லை. பதியே ஈச்வரன் என்றிருக்கவேண்டும். மகராஷ்டிரர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் நோன்புகள் அதிகம். அவர்கள் செய்யும் அநேக விரதங்களில் கன்யகாவஸ்தையில் செய்யவேண்டியவை சிலவுண்டு. அவைகளில் பரமேச்வரனைப் பதியாக நினைத்துப் பூசை செய்யவேண்டுவது ஒன்று. விவாகமானபின்பு பதியை ஈச்வரனாக நினைத்துப் பூசை செய்யவேண்டும். "நான் முன் பூசைசெய்த பரமேச்வரன் இப்படி வந்திருக்கின்ருர்' என்ற ஞாபகமிருக்கவேண்டும். ஸ்ரீராமர் அவதாரம் செய்தார். அவருடைய பத்னியாகச் சீதாதேவி இருந்தது கூட அவ்வளவு பாதிவிரத்யமில்லை. இராமர் புருஷனாக வந்தால் யாரும் சீதைக்குமேல் இருக்கலாம். மனதிற்

குச் சலனம் ஏற்படக்கூடிய பல ஆபத்துக்களில் ஜாக்கிரதையாக விருந்தாள் என்பதனுல்தான் அவளுக்குக் கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. இராமன் காட்டிற்குப்போகும்பொழுது நானும் வருவேனென்று சண்டை போட்டாள்.

"பாதிவிரத்தியத்தில் மிகவும் ஜாக்கிரதையாக விருந்தவள் **நளாயினி**. அவள் திரௌபதியின் முற்பிறப்பு. அவள் இருந்ததுதான் உத்தம பாதிவிரத்யம். பரம விபரீதமான குணங்களும், பரம குத்ஸிதமான சரீரமும் இருந்தாலும் பதியினிடத்தில் பக்திபண்ணினுள். தேஹம் நன்ருயிருந்தால் நாமென்ன விரதமாயிருக்கிறது. மஹாமகக் குளத்தில் ஊற்றுப்போட்டு ஜலம் இறைத்தால் வெள்ளைக்காரன்கூட ஸ்நானம் பண்ணுவான். எவ்வளவு சேருனலும் அது தீர்த்தம் என்று முழுகினுல் அப்பொழுதுதான் உண்மையான பக்திஉண்டு என்று தெரியும். பதியானவன் நிரம்பப் பணக்காரனுகவும் அழகுடையவனுகவும் இருந்தால் எல்லாரும் அவனிடத்தில் பிரியமாயிருப்பார்கள். மூடனுகவும் குரூபியாகவும் இருக்கின்றவனிடத்தில் 'அவர் எப்படியிருந்தாலும் நமக்கு வெறுப்புக் கூடாது. நம்மனது என்று ஒன்று நமக்கு வேண்டாம். நாம் அப்படியிருந்துவிட்டால் என்ன பண்ணுவோம்' என்று நினைக்க வேண்டும். அவளுக்கு அவருடைய செய்கையால் மான நஷ்டம் முதலிய குறைகள் வரும். அதற்காக ஸ்திரீகள் வருந்தக் கூடாது. 'நாம் அப்படிப் பிறந்தால் என்ன பண்ணுவோம்' என்று இருக்கவேண்டும். அசட்டைப் பின்பற்றினுல் அப்பொழுது அதிகப் புண்ணியம். நமக்கு ஒருமனது; அது அவருடையமனது என்று அனுஸரித்து வருபவள்தான் பதிவிரதை. எத்தனை கஷ்டம் வந்தாலும், அவர் நல்ல பதியாகவிருந்தால் நம்முடைய பதிவிரதத்தைக் காட்டமுடியாது. பரமேச்வரன் இப்படிக் கொடுத்துப்பார்க்கின்ருர்", என்று சந்தோஷமாக விருக்கவேண்டும். அவமானம் கஷ்டம் எல்லாம் கொஞ்சகாலந்தான் இருக்கும். 'இருக்கட்டும்; அவர் மனதுதான் நம் மனது. நமக்கென்றுவேறு இல்லை.' என்று இருந்துவிட்டால்அதிகப் புண்ணியம் உண்டாகின்றது. அவமானம் முதலியவைகளுக்குப் பயந்துகொண்டு விரோதித்துக் கொண்டிருந்தால் கொஞ்சம் இகத்தில் லாபமிருக்கலாம்; ஆனுல் கஷ்டம் அதிகம். சித்த விருத்தியையே அர்ப்பணம் பண்ணிவிட வேண்டும். பதி நன்ருக விருந்தால் அவர் நன்ருக விருக்கிருர் என்பதற்காக அன்பாக விருப்பது **பாதிவிரத்தியம் ஆகாது.**

"விவாக சம்பந்தம் இதர தேசங்களில் ஒப்பந்தம் மாதிரியிருக்கின்றது. இருக்கிறவரையிலும் கஷ்டமில்லாமல் அன்போடிருக்கவேண்டும் என்று சொல்லி நமக்குப் பிரேமை போதாதென்றும் சொல்லுகிருர்கள். அந்தக் கல்யாணங்களும் ஸ்வாமி ஸந்நிதானத்தில் தானே செய்கின்ருர்கள்; ஆனுலும் அவைகளுக்கும் நம் விவாகத்திற்கும் வித்யாஸமுண்டு. எல்லாரும் தங்களுக்கிருப்பவைகளை ஓரிடத்தில் அர்ப்பணம் செய்யவேண்டும். புருஷன் குருவினிடத்தில் அர்ப்பணம் பண்ண வேண்டும். ஸ்திரீகள் பதியினிடம் அர்ப்பணம் பண்ண வேண்டும். எழெட்டுப் பேர்களை குருவாக வைத்துக்கொண்டால் கஷ்டம். அப்பொழுது மனம் மாறும். ஆகையால் ஒரு குருவைத்தான் வைத்துக்கொள்ளவேண்டும். அதேபோல் ஸ்திரீ மனதை ஒருவரிடம் அர்ப்பணம் பண்ணவேண்டும். நம்முடைய மனதிற்குத் தோன்றுவதை விட்டுவிடவேண்டும். லோகத்தில் லாப நஷ்ட மென்பவை உண்மையில் இல்லை. அவை கொஞ்சநாள் இருப்பனபோல் தோன்றுவன. பாக்கி இடங்களில்தான் லாப நஷ்டம் பார்க்கவேண்டும். அந்தக் குருவினிடத்தில் சரணுகதி பண்ணவேண்டும். மாடியிலிருந்து விழுந்தால் பூமி தாங்கும். மரத்திலிருந்து விழுந்தாலும் பூமி தாங்கும். பூமியிலிருந்து விழுந்தால் பூமிதான் தாங்கும். சகல அபசாரத்தைக் குருவினிடம் சொல்லித் தீர்த்துக்கொள்ளலாம். குருவினிடம் அபசாரம் பண்ணினுல் எங்கே அபசாரம் பண்ணினேமோ அங்கேதான் செல்லிக்கொள்ள வேண்டும்.

"குரு ஒருவரைத் தேட வேண்டியது நம் கடமை. மனது மாருமல் இருக்கவேண்டுமென்று நாம் பெரியோர்களைத் தேடுகின்ருேம். அர்ப்பணம் பண்ணுவதைப் பிரதானமாக வைத்துக்கொண்டால் யாராயிருந்தாலும் சரி போதும். நல்லவர்களாக விருந்தால் நல்லதாக விருக்கும். நமக்கு என்ன காரியத்துக்காக அது வேண்டும். அயோக்கியன் குருவாக விருந்தால் மனது நல்ல பக்குவமடையும். அப்படித்தான் இருக்கவேண்டும். பரீக்ஷித்து மனதின் பக்குவத்தைத் திடப்படுத்த ஏற்படுத்தப்பட்டதி அது. அதனுல் அதிகப் புண்ணியம் உண்டென்று எனக்குத் தோன்றுகின்றது. மகான்களை அடைகிறது நம்முடைய மனே பக்குவத்தைப் பரீக்ஷிக்க விரும்பாத சோம்பலால்தான். அவர்கள் பெரியவர்களாயிருந்தால் நமக்கு ஒரு சக்தியும் இல்லை. நம்முடைய பக்தியும் பிரயோசனப்படவேண்டும். வெங்கடாசலபதி கோவிலில் அர்ச்சகர்கள் அசுத்தியாக விருக்கின்ருர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதற்காக நாம் தரிசனம் பண்ணுமல் இருக்கின்ருேமா? நாம் அர்ப்பணம் பண்ணுவதுதான் இலாபம். குரு மஹானுக இல்லாவிட்டால் ஒவ்வொரு க்ஷணத்திலும் துன்பமுண்டாகும். அதை மீறித் திடமாக விருந்தால் அதிகப் புண்ணியம் உண்டாகிறது.

"புருஷன் குருவைத் தேடவேண்டும். எந்த ஸமயத்தில் விவாகமாயிற்ருே அப்பொழுதே புருஷன்ஸ்திரீக்குக் குருவாகின்ருன். அவன் எவ்வளவுக் கெவ்வளவு துஷ்டனுயிருக்கின்ருனே அவ்வளவுக்கவ்வளவு அர்ப்பண சக்தி அதிகமாகின்றது. அவன் மனதின்படி போவது நமது காரியம் என்று நினைக்க வேண்டும். அதுதான் பாதிவிர்த்தியம். இவன் பணக்காரன், அழகாக விருக்கின்ருன் என்ற ஞாபகங்கள் தோன்றுவதற்கு முன்பே நமக்கு ஏற்பட்ட இடம் இது என்று நினைத்து அப்புறம் அந்த விடத்தில் எல்லாவற்றையும் அர்ப்பணம் பண்ணவேண்டும். இது பிராமணர்களுக்குத்தான். மற்றவர்களுக்குத் தேசபுஷ்டி பிரதானம். இவர்களுக்கும் இது வேண்டும். ஆனுல் அது அடுத்த படியாகத்தான். இந்த விஷயங்களெல்லாம் தெரிந்துகொள்ளாமல் சட்டம் ஏற்படுத்திவிடுகின்ருர்கள். அதற்காகப் பல பொய்க்காரணங்கள் சொல்கிருர்கள்."

"......விவாகசம்பந்தமாக இதுவரையில் பல விஷயங்களைச் சொன்னேன். பதி எவ்வளவு கெட்டவனுக விருந்தாலும்அப்படியிருக்கின்ருனே என்று துக்கப்படக் கூடாது. அப்படி அவன் இல்லாமல் இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். பிரீதியோடு அவனைப் பிரார்த்திக்க வேண்டும். கொஞ்சங்கூடச் சலிப்பில்லாமல் இருக்கவேண்டும். இப்படியிருக்கின்ருனே என்று துக்கம் வரவே கூடாது.அவன் மனது சந்தோஷமாக இருப்பதை உத்தேசித்தே பிரார்த்திக்கவேண்டும். அவன் பின்னேடே போகவேண்டும்.அதனுற்ருன் பத்தினிக்குச் "**சாயா**" என்று ஒருபேர் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருந்து தனக்கென்று ஒன்று இல்லாமலிருந்தால் கவலையில்லை. அதனுல் ஸ்திரீகளுக்கு லாபம்."

இவ்வாசகங்களை அருளியுள்ள ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள், இந்தியர்தம் பண்டைய நாகரிகச் சிறப்புக்கள் அனைத்திற்கும் ஆதாரமாகிய சாத்திரங்களனைத்தையும் கற்றுத் துறைபோகிய பெரியவர்.அதனேடு மேனுட்டுச் சிந்தனையாளர் வரைந்துள்ள நூல்களையும் ஓதி உணர்ந்திருக்கும் நலமுடையவர். துறவுநெறி வாழ்க்கையர். தெய்வபக்தி சிறந்தவர். நுண்ணிய அவர் அறிவின் மேன்மையை அவருடன் ஒரு முறை பயின்றிருப்பவரும் எளிதில் தெரிந்துகொள்வார். அன்னதோர் அரிய பெரியவர் ஒருவர் உரையினை ஏற்றுக்கொள்ளவேண்டா என்று இயம்பத் துணிபவர், அவருக் கிணையான அறிவும் கல்வியும் படைத்தவர்களாகவன்ருே யிருத்தல்வேண்டும். அவ்வாறு இருந்து, அவருடைய மொழிகளில் இவை யிவை தர்க்கத்திற்கும் அநுபவத்திற்கும், அதனுல் மாந்தர்தம் நன்மைக்கும் விரோதமானவைகளாயிருக்கின்றன வென்று தாம் தர்க்கம் முதலியன வழுவாமல் எடுத்துக் காட்டியபின் அன்ருே வேருென்று பேசுவதற்கு அவர்களுக்கு வாயுண்டு. அதுவரையில், சும்மா விருங்கள் என்று சொல்வார்மீது விரோதங் கொண்டக்கால் யாருக்குக் குறைவுண்டாகும் என்பதை இயம்பவும் வேண்டுமோ.

தமிழ்ப் பாடம் 56.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[88-வது பக்கத் தொடர்ச்சி]

அன்னவாறு இரங்கி இரங்கி நைந்துநைந்து நளன் கடற்கரையைக் கடந்து சென்று, அயோத்திமா நகரை அடைந்து, அங்கு அரசாண்டிருந்த இருதுபர்ன இராஜனிடம் தேர்ப்பாகனுகவும் சமையற்காரனுகவும் தொழிலில் அமர்ந்தான் என்பதை இனி வரும் ஆறு செய்யுள்கள் கூறுகின்றன.

முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர் [பி
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்
அருகுடைக்கு நன்னட் டரசு. 23.

பதப்பிரிவு:—முன் நீர் மடவார் முறுவல் திரள் குவிப்ப நல் நீர் அயோத்தி நகர் அடைந்தான் பொன் ஈர் முருகு உடைக்கும் தாமரையின் மொய் மலரை தும்பி அருகு உடைக்கும் நல் நாட்டு அரசு.

அன்வயம்:—பொன் ஈர் முருகு உடைக்கும் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி அருகு உடைக்கும் நல்நாட்டு அரசு—முன்நீர் மடவார் முறுவல் திரள் குவிப்ப—நல்நீர் அயோத்தி நகர் அடைந்தான்.

பதவுரை.

பொன் - மகரந்தத்தையும்
ஈர் - குளிர்ந்த
முருகு - வாசனையையும்
உடைக்கும் - வீசுகின்ற
தாமரையின் - தாமரையினது
மொய் - (இதழ்கள்) அடர்ந்த
மலரை - பூவை
தும்பி - வண்டுகள்
அருகு - பக்கத்திலிருந்து [கின்ற
உடைக்கும் - (கால்களால் கிண்டி) மலர்த்து
நல் - நல்ல
நாட்டு - நாட்டினது
அரசு - அரசனுகிய நளன்,
முன்நீர் - கடலானது
மடவார் - மாதர்களது [ன்ற முத்துக்களை
முறுவல்திரள் - பற்களின் வரிசையைப் போ
குவிப்ப - கரையில் குவித்துக்கொண்டிருக்க
(அவ்வழியைக் கடந்து)
நல் - நல்ல
நீர் - நீர்வளப்பமுடைய
அயோத்தி - அயோத்தி யென்னும்
நகர் - நகரத்தை
அடைந்தான் - சேர்ந்தான்.

குறிப்பு:—முறுவல், என்ருல் பல் என்பது பொருள். அது இங்கு உவமை ஆகுபெயராய் முத்தை உணர்த்தியது. முன்நீர் - முதன்மையாகிய நீர் - கடல்.

[னென்
மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோ,
றான்றேய்க்கும் வேலா னுயர்நறவத்-தேன்றேய்க்கும்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமி னென்றுரைத்
தேர்வேந்தன் வாகுகனுய்ச் சென்று. [தான் 24.

பொழிப்புரை:-தேர்களையுடைய வேந்தனுகிய நளன் வாகுகன் என்னும் பேரோடு சென்று, (இருதுபர்ன மகாராஜனது வாயிலில் இருந்த தூதரைப் பார்த்து) "பகைவர்களது உடலைக்குறைக்கின்றவேலாயுதத்தையுடையவனும், உயர்ந்த மணமமைந்த தேன் தோய்கின்ற மாலையை அணிந்தவனுமாகிய உங்கள் அரசனுக்கு, குதிரைகள் கட்டிய தேரை நடத்துந் தொழிலிலும் சமையல் தொழிலிலும் சிறந்தவன் நான் வந்திருக்கிறேன் என்று என் வரவைத் தெரிவியுங்கள்" என்று சொன்னுன்.

அம்மொழியைத் தூத ரரசற் கறிவிக்கச் [ழிக்குத்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே-இம்மொ
தக்கானை யிங்கே தருமி னெனவுரைக்க
மிக்கானுஞ் சென்ருன் விரைந்து. 25.

பொழிப்புரை:—அந்த வார்த்தையைத் தூதர்கள் அரசனிடம் போய்ச் சொல்ல, அவன் இவை மிகவும் செம்மையாய் இருந்தன என்று உணர்ந்து, தேர்த் தொழிலும் மடைத்தொழிலும் செய்கின்ற வொருவன் இவ்வளவு செம்மையாகப் பேசவும் வல்லவனே என்று சிந்தித்து,அவனைப் பார்க்கவேண்டும் என்னும் அவாமிக உடையவனுய், "இப்படிப்பட்ட வார்த்தை சொல்லும் தகுதியுடையவனை இங்கே அழைத்து வாருங்கள்" என்று சொல்ல, தூதர் வந்து நளனுக்கு அதைச் சொன்னதன்மேல், யாவரினுஞ் சிறந்தவனுகிய நளன் விரைந்து உள்ளே சென்ருன்.

பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயாநீ
எத்தொழிற்கு மிக்கானி யாது பெயரென்ருன்
கைத்தொழிற்கு மிக்கானுக் கண்டு. 26.

பொழிப்புரை:—பொய் அடையாத மனதுடைய நளனை இருதுபர்னன், தனது செம்மையான முகம் மலர்ந்து நோக்கி, கைத்தொழிலில் வல்லவன் ஒருவனுக அவனை மதித்து, "ஐயா நீ, எத்தொழில் செய்வதில் சிறந்தவன்" என்று வினவினுன்.

அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன [னென்ருன்
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்யா
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. 27.

பதப்பிரிவு:—அன்னம் மிதிப்ப அலர் வழியும் தேறல் போய் செம் நெல் விளைக்கும் திரு நாடர் மன்ன மடை தொழிலும் தேர் தொழிலும் வல்லன் யான் என்ருன் கொடை தொழிலில் மிக்கான் குறித்து.

அன்வயம்:-கொடைத் தொழிலின் மிக்கான், குறித்து, "அன்னம் மிதிப்ப அலர் வழியும் தேறல்போய்ச் செம்நெல் விளைக்கும் திருநாடர்மன்ன, யான்மடைத் தொழிலும் தேர்த்தொழிலும் வல்லன்'; என்ருன்.

பதவுரை.

கொடை - (கேட்டவர்களுக்குக் கேட்டதை வரையிலாது) கொடுப்பதாகிய

தொழிலில் - செய்கையில்
மிக்கான் - சிறந்தவனாகிய நளன்,
குறித்து - (அயோத்திமன்னன் வினவியதை) மனதிற்கொண்டு
"அன்னம் - அன்னங்கள்
மிதிப்ப - ஏறித் துவைப்பதால்
அலர் - தாமரை மலரினின்று
வழியும் - வழிகின்ற
தேறல் - தேன்
போய் - பாய்ந்துபோய், (வயல்களிலுள்ள)
செம் - சிவந்த
நெல் - நெல்பயிரை
விளைக்கும் - விளையச் செய்யும்
திரு - அழகிய
நாடர் - அயோத்திநாட்டு ஜனங்களுக்கு
மன்ன - மன்னவனே,
யான் - நான்
மடைத்தொழிலும் - சமையல் தொழிலும்
தேர்த்தொழிலும் - தேரை ஓட்டும் தொழிலும்
வல்லன் - வல்லவன்"
என்றான் - என்று கூறினான்.

இலக்கணம்.

எழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய கால அளவை மாத்திரை என்பர். ஒருதரம் கையை நொடிப்பதற்கு அல்லது கண்ணைக் கொட்டுவதற்கு வேண்டிய பொழுது ஒரு மாத்திரை. அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிர்க்குறில் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு மாத்திரை பெறும். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்ற ஏழு உயிர்நெடில்கள் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரை பெறும். க் ச் ட் த் ப் ற் என்ற ஆறு வல்லின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரை பெறும். க் ஞ் ண் ந் ம் ன் என்ற ஆறு மெல்லின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரையே பெறும். அவ்விதமே ய் ர் ல் வ் ழ் ள் என்ற ஆறு இடையின மெய்எழுத்துக்கள் ஒவ்வொன்றும்பெறுவது அரை மாத்திரையே. ஆகவே, மெய்யெழுத்துப் பதினெட்டிற்கும், அது எந்த இனமாயிருந்தாலும், தனித்தனி மாத்திரை அரை. உயிர்மெய் எழுத்துக்களும் க கி கு கெ கொ, என்பனபோல் வல்லெழுத்து மெய்களின்மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், ம மி மு மெ மொ, என மெல்லின மெய்யெழுத்துக்களின்மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், வ வி வு வெ வொ, என இடையின மெய்யெழுத்துக்களின் மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், குறிலாயிருந்தால் ஒரு மாத்திரையும், அப்படியே நெடிலாயிருந்தால் இரண்டு மாத்திரையும் பெறும். ஆதலால் உயிர்எழுத்துக்களுக்கும் அவ்வுயிர் எழுத்துக்கள் சேர்ந்து ஆன உயிர்மெய் எழுத்துக்களுக்கும் உச்சரிக்கின்ற அளவில் வித்தியாசம் இல்லை. ஃ என்னும் ஆய்த எழுத்திற்கு மாத்திரை அரை.

மேற்சொன்ன அளவுகள் அவ்வந்த எழுத்துக்களுக்கு இயற்கையாய்ப் பொருந்திய மாத்திரைகள் ஆகும். ஆயினும் சிற்சில சமயங்களில் சில எழுத்துக்கள் தமக்கு இயற்கையாயுள்ள அளவிற்கு அதிகமாகவேனும் குறைவாகவேனும் ஒலிப்பதும் உண்டு. அதிகமாக ஒலிக்கும்போது அவ்வெழுத்து அளவெடுத்து இருக்கின்றதென்றும் குறைவாக ஒலிக்கும்போது குறுகி இருக்கின்றதென்றும் சொல்வர். முன்னது அளபெடை என்றும், பின்னது குறுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

செய்யுள்களில், "மாஅல் யானையொடு மறவர் மயங்கி" என்பனபோல் சில வந்திருக்கக் காணலாம். இதனில், 'மால்' என்றிருக்கவேண்டியது 'மாஅல்', என வந்திருகின்றது 'மா' என்ற எழுத்திற்குப்பின் வந்திருக்கின்ற அ என்ற எழுத்து அச்சுப்பிழை அன்று. 'மா' என்ற நெட்டெழுத்தை இன்னும் சிறிது நீட்டி உச்சரித்தால்தான் இந்தச் செய்யுளடியின் ஓசை நேராக இருக்கும் என்று காட்டுவதற்கு அடையாளமாக எழுதப்பட்டிருக்கின்றது அந்த அ வென்னும் எழுத்து. ஆகையால், மா, என்ற உயிர்மெய் எழுத்தில் ஏறிப் பின்னதாக உச்சரிக்கப்படுகின்ற ஆ என்னும் உயிர் நெடில், தனக்குரிய இரண்டு மாத்திரை போதாமல் மூன்று மாத்திரைபெறவேண்டியதாயிற்று. அதாவது 'மாஅல்' என்று சொல்லும்போது சாதாரணமாக 'மால்' என்பதைப்போல் உச்சரிக்காமல், மா என்ற எழுத்தை மூன்று தரம் கைந்நொடிக்கின்ற நேரத்தினளவு உச்சரித்து அப்புறம் ல் என்ற எழுத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆதலால், "மாஅல்" என்பதில் அ என்ற எழுத்து, மா என்னும் எழுத்திலுள்ள ஆ என்ற உயிர் தன் அளவுக்கு அதிகப்பட்டு ஒலிக்கும் என்று காட்ட வந்திருக்கின்றதே அல்லாமல், அந்த அ விற்கு இங்கே தனி உச்சரிப்பு இல்லை. இப்படி வந்திருக்கின்ற சொற்களைப் படிக்கும்போது, 'மாால்' என்று நீட்டிப் படிக்கவேண்டுமே யல்லாது 'மா அ ல்' என்று மூன்று எழுத்துக்களையும் உச்சரிக்கப்படாது. இவ்விதமாக உயிர் நெடில் எழுத்துக்கள், இரண்டு மாத்திரைக்கு மேற்பட்டு உச்சரிக்க வேண்டிய அவசியம் இசையைக் கருதி நேர்கின்றபோது அவை அளவெழுந்து இருக்கின்றனவென்று சொல்வோம். அவைதாம் உயிரளபெடை. உயிர்நெடி லெழுத்துக்கள் மாத்திரந்தான் அளபெடுக்கும்; அவ்வாறு அளபெடுக்கும்போது அதற்கு அடையாளமாய் அந்த அளபெடுத்த நெடிலுக்கு இனமாகிய குற்றெழுத்தைப் பக்கத்தில் எழுதிக் காட்டுவார். "சுடர்த்தொடீஇ கேளாய்" என்ற இடத்தில், ஈ என்ற உயிர்நெடில் அளபெடுத்திருக்கின்றது. ஆகையால் அதற்கு இனமாகிய குற்றெழுத்து இ பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஐ, ஔ, என்ற இரண்டு நெடில்களுக்கும் நேரே குற்றெழுத்துக்கள் இல்லாதபடியால் அவை அளபெடுக்கும்போது, ஐ ஆனல் பக்கத்தில் அதற்கினமான இயும், ஔ ஆனல் அதற்கினமான உவும் எழுதப்படும். உயிர்க் குற்றெழுத்துக்கள் அளபெடுக்கா.

இவ்விதமே மெய்யெழுத்துக்களும் சில, ஒவ்வொரு சமயம் தம் அரைமாத்திரைக்கு அதிகப்பட்டு ஒரு மாத்திரையாக, இசைநயங் கருதிச் செய்யுள்களில் உச்சரிக்கப்படுவதுண்டு. அவைகளுக்கு ஒற்றளபெடை என்று பெயர். மெய் எழுத்திற்கு ஒற்று என்ற ஒரு பெயர் உளது. ஆகையால் மெய்யளபெடை என்பதற்குப்பதிலாய் ஒற்றளபெடை என்று வழங்குவார். "கண்ண் கருவிளை" என்றும், "பொன்ன் பொறிசுணங்கு" என்றும் வரக்கூடும். கண், பொன், என்ற சொற்களிலுள்ள ண், ன் என்னும்மெய்யெழுத்துக்களை அரை அரை மாத்திரையோடு நிறுத்திக் கொள்ளாமல் ஒரு மாத்திரை அளவு உச்சரிக்கவேண்டும் என்பதைக்காட்ட அந்த அந்த மெய்யெழுத்தே அதன் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. "கண்ண்" "பொன்ன்" என்று இரண்டுதரம் ண், ன் என்ற எழுத்துக்களை உச்சரிக்கப்படாது. எல்லா மெய்யெழுத்துக்களும் அளபெடுக்கா. ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள், என்ற பத்து மெய்யெழுத்துக்கள்தாம் அளபெடுக்கும். ஃ என்ற ஆய்த எழுத்தும், "எஃஃகிலங்கிய கையார்" என்று அளபெடுக்கக் கூடும்.

தேவகி

அத்தியாயம் 3.

[84-வது பக்கத் தொடர்ச்சி]

சொல்லற்றுச் சோர்ந்திருந்த என்னை, 'அம்மா, வென்று அருமையுடன் அழைத்துக்' 'கடிதத்தைப் படித்தனையா' என்று என் மாமன் கேட்டார்.

"என் ஐயனே, படித்தேன், பலமுறையும் படித்தேன்" என்று கூறி மேலொன்றும் சொல்வதற் கியலாமல் அவர் திருமார்பில் தலைவைத்துச் சாய்ந்து கொண்டேன்.

சாய்ந்த என் தலையை, நோய்செய்த சதியால் மிக மெலிந்த தம் கரத்தால் அணைத்து உச்சிமுகர்ந்து, 'உன் சிறிய தந்தை...' என்று துவக்கினதும் விரைந்து நான், 'காணப் பெறுவனோ' என்று கேட்டேன்.

'என் கண்ணே, வந்திடுவார்; நீ கலங்க வேண்டா. அவர்வந் துன்னை ஏற்கும்வரை என் மனையிலேயே நீ இருக்கவேண்டும்,' என்று சொன்னார். நான் தரையினை நோக்கிக்கொண்டிருந்தேன். 'உன் மாமன்முன் மூடுவதை அறியாத உன் தொண்டைக் கனிவாய் இன்று என்பால் என்ன குறை கண்டதோ' என்றவர் கூறலும், 'ஐய, என் பிழை பொறுப்பாய்.' உரை யொன்றும் தோன்றாமல் கலங்குகின்றேன்" என்று கண்ணருவி என் சொற்றொடரப் பதிலுரைத்தேன்.

அருமை பெருகும் முத்தத்தால் என் கண் கலக்கம் அகற்றியருளி, " அம்மா, நீ வருந்தவேண்டா. காவிக்குப் பின்போகும் கருமுகில் உன்னைக் காத்தளிப்பான். உன் சிறியதந்தையும் விரைவினில் வந்திடுவார். அதுவரை என் மனையிலேயே இருப்பதாக உன் திருவாய் திறந்து ஒரு சொற் கூறுவாயேல் என்னுள்ளம் அமைதிபெறும்.' என்று அவர் கூறவே, 'மாமா, நான் நின்மொழி கடப்பனோ. நானாக இம்மனையைத் துறந்தகலேன்.' என்று நான் கூறலும் அவர் முகம் பொலிவுற்றது.

இன்னபடி நாங்கள் உரையாடிக் காலம் கழிக்குமளவில், மாதர்நலம் பேணச் சென்றிருந்த என் மாமியும் வீடுவந்தாள். சூரியனும் மேருவில் மறைந்தான். கருணையிலாக் கயவர்தம் உள்ளம்போல் வையம் இருண்டது. என் மாமன் என் இதயத்தில் இயற்றி வைத்த ஒளியும் அவர் மனையாட்டியின் வரவினால் அவிய இருளின் வயமானேன்.

அன்று வந்துற்ற இரவு என் மாமன் நல்லுயிர்க்கு இரவேயானது. அம்மாலை, உண்டி முடிந்தபின் இருந்தாற்போலிருந்து சுரம் மிகவும் கடுமையாய்க் காயத்துவக்கிற்று. காய்ச்சலின் வெப்பம் அவரைத் தளர்வுறச் செய்தது. சுவாசமும் குன்றலாயது. அந்நிலையில் நாணொருத்தியே அவரரு கிருந்தேன். தேவகி என்றழைப்பார், விழித்தென்னைப் பார்ப்பார், விழித்த கண் மூடிக்கொள்ளும். நாழிகை யாகவாக வெளியிலே நாய்கள் பல கூடிக் குலைத்தன. நாய்களிடும் ஊளையெல்லாம் என் னடிவயிற்றிற் குழம்பின. அவர் மூக்கிலே கைவைத்து ஸ்வாசத்தின் ஓட்டம் இருக்கின்றதாவென்று பார்ப்பேன், கடவுளைக் கைகூப்பித் தொழுதிடுவேன். இன்னபடியே அவ்விரவின் பெரும்பகுதி கழியத் தளர்வுற்ற என் மெய்யும் கண்ணும் துயிலுக்கழைத்தன. பெருந்தகை என் மாமன் திருநினைவே துணையாகக் கண்ணயர்ந்தேன்.

நான் உற்ற துயிலைத்தொடர்ந்து என் மனவரங்கில் கனவொன்றுதோன்றலாயிற்று. வாயில்வழி வாராமற் கூரையேறிக் குதித்துவந்தான் கார்வென்ற நிறத்தொருவன். வந்தவன் உடனே என் மாமன் படுக்கையை நண்ணினான்; பின் என்னைநோக்கி இடியெனச் சிரித்தான். அவன் பொல்லாச் சிரிப்பில் சாவின் நடனத்தையே கண்டேன். கண்ட நான் நடுங்கிக் கண்களை மூடிக்கொண்டேன். அவ்வேளை காலடியரவமொன்று என் செவியடையக் கண்திறந்து பார்த்தேன்.

ஒரு பெரியார் வாடிய முகத்துடன் என்னருகுவந்து நின்றார். "என் கண்ணே, குழந்தாய், நானிருக்கின்றேன், இனி உனக்கொரு குறையுமில்லை" என்று கூறி என்னருகு வந்தார். அச்சத்தால் நான் இரண்டடி பின்விலகினேன். பிறகு அவரைக் காணவில்லை. அப்பொழுது வடதிசையிலிருந்து இளவீரன் ஒருவன் வாவுபரி யேறித் தென்முகமாய் விரைந்து வந்தான். அவன் நெடுந்தோளும், திருமுகமும் என் கண்களைக் கவர்ந்தன. என்னருகு சிறிது நின்று பின் மறைந்தகன்றான். என் மாமி யிடும் நெடுங்குரல் ஒன்று என் செவிசாரத் திரும்பிப் பார்த்தேன். அவள் பெட்டியொன்றைக் கையிலேந்தி விரைந்துநடந்தாள். விஜயனே ஓடிவந்து அவள் கையிருந்த பெட்டியைக் கவர்ந்து சென்றான். எருமைக் கடாவொன்று அவனைத் துரத்திச் சென்றது. கோமளம் ஐயையோ வென்று தலையில் கைவைத்து ஓலமிட்டாள். பாம்பொன்று என்னைச் சீறிநோக்க நான்தேரொன்றில் ஏறிக்கொண்டேன். பிறகு மாமனே தேடிவந்து என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வீட்டினுள் நாங்கள் நுழைந்ததும் வாயில் நிலையிடிந்து என் தலையில் விழுந்தது. உடனே நான் கண்விழித்துக்கொண்டேன்.

விழித்தெழுந்த நான் என் தலையைத் தடவிப் பார்த்தேன். என் தலையில் புண் ஒன்றுமில்லை. எனவே கண்டது கனவென்று தெளிந்த நான், என் மாமனருகு சென்று, அவரைத் தொட்டுப் பார்த்தேன். பனிக்கட்டியென அவர் தேகம் குளிர்ந்துபோயிருந்தது; என் உடலும் உடன் உறைந்தது. மூக்கினருகு கைவைத்தேன், மூச்சின் ஓட்டமுமில்லை. பரபரப்புடன் தட்டியெழுப்பினேன், கூவியழைத்தேன். அவர் கண்மலர் திறக்கவில்லை. சண்டமுகில் உருத்தெழவே நிலைகுலையும். மரமேபோல் நிலையற்றுத் தரையிற் சாய்ந்தேன்.

"வள்ளலே, என் மாம, என்னை விட்டுவிட்டுப் போக நீ துணிந்தனையோ ! ஐயையோ என் செய்வேன். உன் கண்ணளியால் இதுகாறும் காத்த நீ இன்று என்னைத் தேம்பித் திரியவிட்டுச் சென்றதுவும் போதுமோ தானு னக்கு.உன்பால் நானிழைத்த எப்பிழைக்கு இது தண் டனையோ, நானறியேன். உனது இயற்கையான கரு ணையை இன்று எங்கு உகுத்தாய்' என்று அலறினேன். தரையிற் புரண்டேன்.நான் அழுத வழுகையெல்லாம் என் மாமன் ஆருயிரை மீட்டுவரவில்லை."பெற்றவர்க் குக் காலனேயாய் வந்துதித்த பாவியேன் என்னைத் தாயுமாய்த் தந்தையுமாய்ப் பரிந்துகாத்த உன்னை இழந்து நான் வாழ்வதுவும் எவ்வாறு. நாளெல்லாம் நான் படும் சிறுமைகளை அன்றன்று துடைத்தகற்றி என்னுள்ளத்தைக் குளிரவைக்கும் பெற்றியுள நின் திருவதனம் தவழ்ந்திலங்கும் கருணைபயில் திருநகையை இனி நான் என்று காண்பேன். நின் மனைக்கிழத்தி, உலகெல்லாம் உய்வதற்கும்பெண்பாலார்முன்னேறிச் சிறப்பதற்கும் உழைக்க வந்த என் மாமி, அவள்கை தினவெடுக்க வீங்கும் என்கன்னத்தின் துன்பமொடு பரிபவமும் தீர்த்தகற்றும் நின் வாய்நிறைந்த முத்தத்தை யினியெனக்கு யார் அளிப்பர், என் மாமாவோ. என்பால் ஆசைவைத்தார் அருளுடையார் யாவருக்கும் சின்னாளே சிரத்தெழுதி விட்டனனே பிரமதேவன் ! படைக்கும் தெய்வமே, நீ மண்ணெடுத்த நேரத்தின் கொடுமையோ ; அல்லது சீற்றத்தில் என்னைத் தான் ஆக்கினையோ. இது போதுமோ உன் பெருமைக்கு. ஐயையோ என் செய்வேன்."

இன்னபடி புலம்பினேன், அவர் மார்பிலே விழுந்துருண்டேன். தையம்மாள் ஓடி வந்து என்னைத் தேற்றினள். என்னிலை யுற்ற வொருவர்க்குத் தேறுதலு மொன்றுண்டோ. வேகின்றவென் னடிவயிற்றைப் பிசைந்தேன், புலம்பலுற்றேன்.

"விஜயன் தன் கைவலிமை யெல்லாம் என் தலையில் விழ்ந்தவந்நாள், புண்ணுற்ற அத்தலைவருடிநோயாற்றி, 'என் உயிரே' என்று ஐயா நீ சொன்ன சொல்லின்று பொய்த்ததையோ. உன்னுயிரே நானனால் உன்னுடனே நானும் காலனது கைப்பட் டிருக்கமாட்டேனே. ஏ, கண்ணிலாக் குரூபியே, நின் கொடுமை போமளவு இன்று கண்டேன். என் கனவினிலே கள்வனெனக் கரந்து வந்த ஏ, கருங்கோழாய், உனக்குக் கருணை சிறிது உளதானல் என் மாமனது உயிரோடு என்னுயிரும் கவர்ந்துசெல்வாய். இவ்வுலகில் அறமுண்டு, நீதியுண்டு, கள்வருக்குக் காவலுண்டு, கூடமுண்டு; கள்வனே, நின் கைதவத்தைத் தடுப்பதற்குக் காவலற்றுப் போயினதோ. இளம்பிள்ளை பொருட்டாக அக்கூற்றுவனைக் காலாற் கடிந்த ஒரு கடவுளே, இன்று என் மாமனது நல்லுயிரைக் கவர்ந்தகன்ற கயவனைக்காய்வதற்குக் காலற்றுப் போயினையோ! பிள்ளைக் கறிதின்று தின்று நின் கருணையைக் கொன்றகற்றி விட்டனையோ! ஐயகோ, துடிக்கின்றேன். மடுவிற்குடித்தவொரு யானை, வேதமுதலே என வழையாமுன் ஓடிவந்த கோவிந்தா என் னுள்ளத்துடிப்பையெல்லாம் அகற்றிவைக்க இன்று நீ மனங்கொண்டு வாராயோ! எம்பெரும, தொழுகின்றேன்."

இன்னபடி அழுதழுது கண்ணீராய்க் கரையலானேன். தையம்மாளும் உடன்கரைந்தாள். வந்தவர் போனவர் அழுதார், கோமளமும் அழுதாள். விஜயனும் அழுதான், எல்லோரும் அழுதனர். என் துயர் காணத் தரியாப் புட்களும் அழுதன. கதிரவன் கீழ்த்திசைப் பள்ளியெழுதலும், என் துயர்காணக் குடந்தைமா நகரமும் துயில்நீத் தெழுந்தது.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[89-வது பக்கத் தொடர்ச்சி]

(iv) (c) தமிழெழுத்துஉற்பத்தியும், அப்பரும்

மூல முதலெழுத்தாகிய * ஓகரமே அகர மென்றும் அகரமே கடவுள் வடிவென்றும் சைவகுரவர்களனைவரும் ஓதினர். இதைச் செவ்வனே யுணர்வதற்கு, மாணவர், பண்டைக்காலத்திய எழுத்துக்களின் உருவத்தைத் தெரிந்துகொள்வது அவசியம். வட்டெழுத்தெல்லாம்தமிழ்"கெட்டெழுத்தென்று" எண்ணுவதற் கில்லை. குழந்தைப் பருவத்தில் தமிழ் எழுதஆரம்பிக்கும் சிறுபிள்ளைகளெழுத்திற்கும் வட்டெழுத்துக்கும் ஒற்றுமைகாட்டலாம். ஆதலால்தமிழர், எழுத்தின் உருவம் உண்டாக்கிய எழுத்தின் (நடை) ஆரம்பகாலத்தில், சிறு வட்டத்திலிருந்து அகரமுதலஎழுத்துக்கள் எழுதஆரம்பித்திலர். எனவே அகரமானது தெலிங்கெழுத்தில்(க)X-வின் அடிப்பாகமும், மகரம் தலைகீழாகிய உருவமும், சையோகமாகக் காணலாம். மகரத்தின் அடிக்கோட்டின் கனத்தை இருபிளவாக்கின் மேலே உகரமும் கீழே தலைகீழ் நின்ற (ம) மகரமும் ஒன்றின்மீது ஒன்று பொருந்த,உகர முடிவில் (1)வடிவுப் புள்ளியும் மேலே நிற்கும். முன்னரே, இப்புள்ளி, சிவலிங்கத் தலையென்று கண்டோம். எனவே, அகரமானது, மூன்று எழுத்து தன்னுள்ளமைந்த ஒரு எழுத்துப்பின்னல் (Monogram) என்பது விளங்கும். அதாவது நாகரி எழுத்தில் அகரத்தின் தன்மையும், தமிழ் அகரமும் சற்றேறக்குறைய ஒன்றேயாம். உமாதேவியார் உருவமே, சிவபெருமான் உருவமென்பது, அகரவெழுத்தாகிய சிவத்தின் உருவம் ஆராயுங்கால் உ ம வாக முடியும் என்றும், அங்கும் சிவபெருமான் சாட்சியான முன்கோடாய் நிற்குமென்றும், அதனால் உமையவள் எங்கும் நன்றாய் விளங்கும் பரசிவத்தின் ஒப்பற்ற பாகமென்பதும், சைவசமயத் துணிபு:—

உமையவளை யொருபாகஞ் சேர்த்தி னான்காண்
உகந்தொலிநீர்க் கங்கைசடையொழுக்கினன்காண்

* முத்த னேழதல் வாமுகி மூம்மூளை
யோத்த னேயொரு வாவுரு வாகிய
சித்த னேதிரு வீழி மிழலையுள்
அத்த னேயடி யேனைக் குறிக்கொளே.
திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை. 4.

இமயவட கயிலைச் செல்வன் றான்காண்
இல்பலிக்குச் சென்றுழலு நல்கூர்ந் தான்காண்
சமயமவை யாறினுக்குந் தலைவன் றான்காண்
தத்துவன்கா ணுத்தமன்காண் தானே யாய
இமயவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காணவனென் னெண்ணத் தானே.
திருவேகம்பம் - திருத்தாண்டகம், 7.

என்பர் அப்பர்.

அகரத்தின் அடி (அரைமாத்திரையுள்ள) மகரமாய் நிற்பதை, இரட்டுறமொழியும் ஒரு திருத்தாண்டக விருத்தத்தில் அப்பர் குறிப்பிடுவது காண்க:—

உரைமாலை யெல்லா முடையவடி
யுரையா லுணரப் படாதவடி
வரைமாதை வாடாமை வைக்கும்மடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும்மடி
அரைமாத் திரையி லடங்குமடி
யகலமளக் கிற்பா ரில்லாவடி
கரைமாங் கலிக்கெடில நாடன்னடி
கமழ்வீரட் டானக் கபாலியடி.
திருவடித் திருத்தாண்டகம். 7.

அகரத்திலிருந்து, இவ்வாறு உகரமகரங்களான உமாதேவியார் உருவை நீக்கிவிடுவோமாயின் அகரத்தின் உரு வெளியாகாதாகையால், இதனை எண்ணியே திருநாவுக்கரசும்,

உமையலா துருவ மில்லை யுலகலா துடைய தில்லை
நமையெலா முடைய ராவர் நன்மையே தீமை யில்லை
கமையெலாமுடையராகிக்கழலடிபரவுந்தொண்டர்க்
கமைவிலா வருள்கொ டுப்பா ரையனை யாற னாரே.
திருவையாறு - திருநேரிசை 9.

எனப் பாடியிருக்கின்றார் போலும். அகரவெழுத்தின் வடிவத்தின் இரட்டிப்பே ஆகாரமாம். அகரத்தின் காலில் மற்றும் அகரம் எழுத ஆரம்பித்து அதன் இடப்பாகத்துடன் விடுவது ஆகாரம். இகரமும் அகரச்சுழியே யன்றோ? உகரம், அகரத்தின் வடிவத்தில் இருப்பதை முன்னரே கண்டோம். இதனால் எல்லா வெழுத்துக்களும் மூலயெழுத்தான ஓகரத்தாலும்† அல்லது அகரத்தாலும் தமது உருவத்தைப் பெறுகின்றன. மெய்யெழுத்துக்களை நாம் உற்று நோக்கின் அவைகளும், அகரத்தின் உருவபாகங்களைப் பற்பல வகைகளில் மாற்றி மாற்றி ஏற்படுத்திய உருவங்களாகக் காணப்படுகின்றன. இத்தன்மையை "அக்கரங்கடோறும் சென்றிடும் அகரம்போல நின்றனன் சிவனும் சேர்ந்தே" என்னும் தொடர்மொழி விளக்கும். மற்றும் திருவள்ளுவர் கூறியதுபோல் "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு". அகரத்தின் தன்மையைச் சிவத்தன்மைக்கு ஒப்பிடலாமென்ப.

இவ்வாறு பரந்து பல உயிர்களாய்த் தோற்றும் அகரத்தைப்போன்றே இறதிப்பொருள் யாவுமாய் நின்ற சிவபெருமான் தன்மையைத் திருநாவுக்கரசு,

பரந்தவன்காண் பல்லுயிர்க ளாகி யெங்கும்;
பணிந்தெழுவார் பாவமும் வினையும்
துரந்தவன்காண் மேலாங் கண்ணி யான்காண்
டோற்றநிலை யிறுதிப் பொருளாய் வந்த [காண்
மருந்தவன்காண் வையகங்கள் பொறைதீர்ப் பான்
மலர்தூவி நினைந்தெழுவா ருள்ள நீங்கா
திருந்தவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே.
திருவேகம்பம் - திருத்தாண்டகம். 2.

என்னும் பாசுரத்தில் குறிப்பிடுவது காண்க.

ஐகாரம், ஔகாரம், நீங்கலாகத் தமிழ் உயிரெழுத்துக்கள் பத்தில், நெடில்இந்தும், குறிலின் அளவு நீட்டியதால் உண்டானவை யென்பதற்கு அவற்றின் உருவமும் ஒருசான்று. இவற்றுள் ஏகாரம் வினாவிற் சிறந்தது. ஏனெனில் அது இருவழியிலும் * (மொழிக்கு முதலிலும் கடையிலும்) நின்று தன் தொழிலியற்றுவது. ஓகாரமாவது திரிசயப்பொருள்கள் (முன்னிலைப் படர்க்கைப் பொருள்கள்) யாவையும் விளக்கும் ஓர் குறியுமாகும், வினாவுமாகும். வினாவுக்கு விடையாய் நிற்பது சுட்டு. "அ, இ, உ, அம் மூன்றுஞ் சுட்டு" என்னும் தொல்காப்பியனார் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் "இதுவும் ஆட்சியும் காரணமும் நோக்கியதோர் குறி, சுட்டி அறியப்படும் பொருளை உணர்த்தலின்" என்று கூறுவார். சுட்டானது எழுத்தானும் மொழியாலும் செய்கையாலும் உணர்த்தவும் உணரவும் கூடியதாகும். செய்கை யென்பது சுட்டுவிரலால் காட்டும் செய்கை மாத்திரமன்று. நாம் அணியும் பொருளாலும் நமது கருத்தைப் பிறருக்குச் சுட்டிக்காட்டலாம். புறப்பொருள் திணைகளில், ஒரு போர்வீரன் அணிந்துகொள்ளும் மலர் அவன் காரியத்தைக் குறிக்கு மன்றே (உ-ம் தும்பை மலர்மாலை சூடினனென்பது யுத்தகளத்திற்குப் போர்செய்யச் செல்கின்றானென்பது விளக்கும்). அதுபோல் திருநீறணிவதும் சில உண்மைகளைப் பிறருக்குச் சுட்டவேயாம். அதை அப்பர்.

† சுட்ட நீறுமெய் பூசிச் சுடலையுள்
நட்ட மாடுவர் நள்ளிருட் பேயொடே
சிட்டர் வானவர் தேருநெய்த் தானனை
இட்ட மாய்த்தொழு வாரின்ப வாணரே.
—திருநெய்த்தானம் - திருக்குறுந்தொகை.

சிவபெருமான் தனது திருமேனியிற் பூசிய திருநீற்றால் அவர் சுட்டிய கருத்துணர்ந்து அன்புடன் அவரை வழிபடுவோர், ஆநந்தமயமாய்த் திகழ்வரென்பது கருத்தாம். மற்றும் "சுட்டு" என்பதன் பொருள் தொல்காப்பியனார் "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" யென்னும் சூத்திரத் தொடர்மொழியாலுமுணர்க. ‡

† கருவ னேகரு வாய்த்தெளி வார்க்கெலாம்
ஒருவனே யுயிர்ப் பாயுணர் வாய்நின்ற
திருவ னேதிரு வீழி மிழலையுள்
குருவ னேயடி யேனைக் குறிக்கொளே
திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை 5.

* "எ, யா முதலும், ஆ, ஓ, வீற்றும்
ஏ, யிருவழியும் வினாவா குமே"—நன்னூல்-எழு. 12.
"ஆ, எ, ஓ, அம் மூன்றும் வினா"—தொல்-எழுத்-32.

† "சுட்டநீறு" என்று கொள்வது சிறப்பன்று. "நீறு" என்பது சுட்டதேயாகும். சுடாத நீறு எங்குமில்லை. எனவே "சுட்ட" என்பது "நீறு"க்கு அடைமொழியாகின்றதென்பது வெற்றுரை அல்லது கூறியதுகூறல் போலாம்.,

‡ "மெய்ந்நிலை சுட்டி னெல்லா வெழுத்துந்
தம்முற் றாம்வரூஉம் ர,ழ வலம் கடையே"
(தொல் - எழு 3.)

என்னும் சூத்திரத்திலும் "சுட்டு" என்னும் மொழிக்கு அமைந்த பொருளும் இதுவேயாம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[92-வது பக்கத் தொடர்ச்சி]

உள்ள வுணர்வினைப் பேணு வச்சையர்.

உவாமதியால் உணர்வழிந்த இராவணன் அவனை ஒழித்து ஒரு நொடியிற் பகலவனைக் கொணர்வித்தான். முன், பெரும்பொழுதுகளாகிய சிசிரம் கூதிர் முதலியவற்றை மாற்றி உலகத்தை மலைவித்ததுபோல் இப்பொழுது இரவையும் பகலையுந் தலை தடுமாற வைக்கின்றனன். சந்திரன் வரக்கண்டு திருவுடன்பொலிந்த சேதாம்பல் அத் திருவினை இடையே இழந்து திகைத்தது. ஆம்பலுக்கு இக் கதி வந்ததெனின், காலம் வருதன்முன் மலருஞ் செவ்வி கமலத்திற்கு வாய்த்ததன்றே. இக்கருத்துக்களை உள்ளடக்கி,

இருக்கின் மொழியா ரெரிமுகத்தி
　　னீந்த நெய்யி னவிர்செம்பொன்
உருக்கி யனைய கதிர்பாய
　　அனல்போல் விரிந்த துயர்கமலம்
அருக்க னெய்த வமைந்தடங்கி
　　வாழா வடாத பொருளெய்திச்
செருக்கி யிடையே திருவிழந்த
　　சிறியோர் போன்ற சேதாம்பல்

[வேதங்களை உரைக்கும் அந்தணர்கள் நெருப்பில் சொரிந்த நெய்யினால் அந்த அனல் வளர்வதுபோல, பிரகாசிக்கின்ற செம்பொன்னை உருக்கியதுபோன்ற சிவந்த சூரியகிரணங்கள் தம்மீது பாய்வதால், சிறந்த செந்தாமரை மலர்ந்தது. செவ்வாம்பல் மலர்களோ; சூரியன் வருவதால் அடங்கி ஒடுங்கி வாழ்வுபெறாமல், அடையத்தகாத செல்வத்தை அடைந்து அதனால் செருக்கி இடையிலே அப்பொருளை இழந்துவிட்ட கீழ்மக்களை ஒத்தன.]

எனப் பாடுகின்றனர். மற்று, தன்னை மகிழ்ந்த ஆம்பலிற் குற்றகதியே அத் தண்மதிக்கும் வந்தது—

நாணி நின்ற வொளிமழுங்கி
　　நடுங்கா நின்ற வுடம்பினனுய்ச்
சேணி னின்று புறஞ்சாய்ந்து
　　கங்குற் றூரம் பின்செல்லப்
பூணின் வெய்யோ னெருதிசையே
　　புகுதப் போவான் புகழ்வேந்தர்
ஆணை செல்ல நிலையழிந்த
　　வரசர் போன்று னல்லாண்டான்.

[உலகத்திற்கு ஒரு ஆபரணத்தைப்போன்ற சூரியன் கிழக்குத் திக்கிலே வந்து சேரவும், அவன்முன்னே நிற்க வெள்கி, உள்ள ஒளிமழுங்கி, நடங்குகின்ற உடம்பைஉடையவனுய் ஆகாயத்தினின்று கீழே சாய்ந்து, இரவாகிய தன் மனைவி பின்னேவர விலகுபவனான சந்திரன், கீர்த்திவாய்ந்த ஓர் சக்கிரவர்த்தியின் ஆக்கினை நடக்கவும், அதனால் தன்நிலைமை அழிந்து ஓடியவோர் அரசனை ஒத்தான்.]

இராவணன் ஆணையால் இரவும் பகலும் அவனிச்சைபோல் மாறின. காலம்பிறழ்ந்து இங்ஙனம் கதிரோன் உதித்த காரணத்தால் உலகத்தின்கண் நிகழ்ந்தன பலப்பல.

மணந்தபே ரன்பரை மலரின் சேக்கையுட்
புணர்ந்தவ ரிடையொரு வெகுளி பொங்கலாற்
கணங்குழை மகளிர்கள் கங்கு னீங்கிட
உணர்ந்திலர் கனவினு மூட றீர்ந்திலர்.

[தம்மை மணந்த மிகுந்த அன்புடைய கணவரை, மலரினால் ஆகிய இனிய படுக்கையில் சேர்ந்தவர்களாகிய திரண்ட குழையை அணிந்த மாதர்கள், கூடலினிடையே தம் கணவர்மீது ஒரு கோபம் உண்டாகி ஊடல்கொண்டு, இடையே இரவு நீங்கிவிட்டதால், அதனையறியாமல், கனவினாலும் தம் ஊடலைத் தீர்த்துக்கொள்ளா திருந்துவிட்டனர்.]

பள்ளியிடத்து ஊடியமாதர் அவ்வூடல் தீர்த்துக்கொள்ளப் பதம்பார்த்திருக்கின்றனர். மற்று, இவ்விரவோ, அப்பதம் நேரும்வரையிற் காலம் காத்திருக்காமல் அகன்றுவிட்டது. ஆதலாற் பாவம் என்ன செய்வாள் அப்பேதை? துனிவரும் நலத்தினை நீட்டித்துத் தன் காதலன் காமத்தைப் பின்னும் பலபடக் கனற்றுதற்குக் கள்ளந்துள்ளும் மனத்தினராய் மகளிர் நினைத்திருக்க, இராவணன் இரவைப் பகலாக்கி வேறொன்று நினைத்துவிட்டனன். ஆதலின், இவர் தம் கள்ளம் கைவர நேரமின்றி மோசம்போயினர். இல்லையேல், இயற்கை யளவுடைய இரவுகளில்,

உய்த்தபூம் பள்ளியி னுட னீங்குவான்
சித்தமுண் டொருத்திக் கதன்பன் றேர்கிலான்
பொய்த்ததோர் றூரியா னிமிர்ந்து போக்குவாள்
எத்தனை யிறந்தன கடிகை யீண்டென்றாள்.

[அமைத்த பூம்பள்ளியில் இருந்த ஒருத்திக்குத் தான் கொண்ட ஊடலைத் தீர்த்துக்கொள்ள எண்ணம் உண்டாயிற்று. அவ்வெண்ணத்தை அவள் கணவன் தெரிந்துகொள்ளாமல் சும்மாவிருந்தான். ஆகையால் தான் ஊடல் தணிகின்றநிலையில் இருக்கின்றாளென்பதை அவனுக்குத் தெரிவிக்கும்பொருட்டு உரையாடப் புகுவாளாகி, பொய்யாகவோர் சோம்பல் முறித்தெழுந்து "இப்பொழுது எத்தனை நாழிகை ஆயிற்று" என்றாள்.]

துனியுறு புலவியைக் காதல் சூழ்சுடர்
பனியெனத் துடைத்தலும் பதைக்குஞ் சிந்தை [யாள்
புனையிழை யொருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு நலத்தினாற் கணவற் புல்லினாள்

[சூழ்ந்த கிரணங்களையுடைய சூரியன் பனியை நீக்குவதுபோல், கோபம்கொண் டெழுந்த ஊடலைக் காதலானது நீக்கிவிடுதலும், நாயகனுடன் கூடவேண்டுமென்று பதைக்கின்ற மனத்தையுடையவளாகி, ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற ஒருத்தி, பொய்யாக உறங்குபவள் போலக் கிடந்து அதனுள் ஓர் கனவுகண்டவள்போல்ஒரு சூதுசெய்து தன் கணவனைத் தழுவினாள்.]

என்று, முன் இராகவன் திருமண விழாவிற்குத் தயரதனுடன் மிதிலாநகர் நோக்கி வழிக்கொண்ட அயோத்திமாதர் இழைத்த சில சூழ்ச்சிகளைக் கம்பர் காட்டியிருக்கும் வண்ணம், இவ்விரவிலும் அவைகளுக்கிணையான கள்ளங்கள் புரிந்து இம்மாதரும் புலவி தீர்ந்த நலத்தினைப் பெற்றிருப்பார்.

மற்று, ஊடினவர் போன்றே கூடியிருந்தவர்களும் குறைகொண்டு வருந்தநேர்ந்தது—

தள்ளுறு முயிரினர் தலைவர் நீங்கலான்
நள்ளிர விடையுறு நடுக்க நீங்கலர்
கொள்ளையி னலர்தரு குவளை நாண்மலர்
கள்ளுகு வனவெனக் கலுழுங் கண்ணினார்.

[சிலமகளிர், நடுஇரவில் பொழுதுபுலர்ந்தமையால் தம் கணவர் தத்தம் காரியங்களைக் கருதிப் பள்ளியை விட்டு நீங்கிவிடவே, தள்ளாடும் உயிரை உடையவர்களாய், நடுநடுங்கி, மிகுந்து வளர்ந்த புதிய குவளைமலர்கள் தேன்சொரிவதுபோல அழுது நீர்வடிக்கின்ற கண்களை உடையவர்களானார்]

இவ்வண்ணம், ஊடல் உணராது உணங்கினார் சில அணங்கனார்; சிலர் கலவிகலைந்து கலங்கினார். எனினும்,

அணைமலர்ச் சேக்கையு ளாட றீர்ந்தனர்
பணைகளைத் தழுவிய பவள வல்லிபோல்
இணைமலர்க் கைகளி னிறுக வின்னுயிர்த்
துணைவரைத் தழுவினர் துயில்கின் றார்சிலர்

[சில மகளிர், மலரால் ஆக்கியபடுக்கையுள் கலவி லீலைகளை முடித்தவர்களாய், பருத்த மரக்கிளைகளைத் தழுவிப் படர்ந்த பவளக்கொடிபோல், தம் இனிய உயிரனைய நாயகரை மலர்போன்ற மெல்லிய தமது இரு கைகளாலும் இறுகக் கட்டிக்கொண்டு தூங்கியிருந்தனர்.]

புலரியோடு தான் போவதற்குரிய கருமம் இருப்பினும் இப் பவளவல்லியைப் பிரித்தகற்றி நீங்குதற்கு எங்ஙனம் மனங்கொள்வான் ஓர் நாயகன்?

இணையணை யிருந்தவர்க் கியன்றன யிவையிவையென்னிற் றனியணை துயின்றவர் திறத்தினை யியம்புதற்குக் கம்பர் மறந்திலர். காலவரைக் குரிய துயில் கொள்ளுந் துணிவினராகிக் கதிரோன்வரவை யாதும் மதித்திலர் இவர்தாம்—

இச்சையிற் றுயில்வதற் கியாவர் கண்களும்
நிச்சயம் பகலுந்த மிமைக ணீக்கில
பிச்சையு மிடுதுமென் றுணர்வு பேணலர்
வச்சையர் நெடுமனை வாயி லானவே.

[இஷ்டப்படி இரவு முழுதும் தூங்குவதற்கென்று நிச்சயம் செய்துகொண்டு உறங்கச்சென்றவர்களின் கண்கள் பகற்பொழுது வந்தும் இமைகளைத் திறக்காதனவாகி, பெரிய தருமங்கள் ஒன்றும் செய்யாவிடினும், வீடேறி வந்து இரப்பவர்க்குப் பிச்சையேனும் இடுவோம் என்று தம் உணர்வை வளர்த்துக்கொள்ளாதவர்களான லோபிகளின் பெரிய மாளிகைகளின் வாயிற்கதவு போன்றன.]

இவ்வுவமையின் அமைதிக் குரியது அக்காலம்; இக்காலம் இது ஏற்புடைத்தாகாதென எண்ணுதற்கிடமுளது. வச்சையர்க்கும் அன்று, பிச்சையிட வேண்டுமெனும் உணர்வு இருந்தது. ஆதலின், இரவலர் வந்து ஏந்தியகையராய் நின்றக்கால் உலோபிகளும் மறுத்தற் காற்றாமல் ஐயமிட நேரும்போலும். ஆதலின் அவ்வுணர்வின் இயக்கத்திற்கு அஞ்சி வறியோர் தம் கண்முன் வாராவண்ணம் வச்சையர் கதவடைத்துக் காத்துக்கொண்டவ ராதல்வேண்டும். ஆதலாற்றான், "உணர்விலர்" என்னாது கம்பர் "உணர்வுபேணலர்" என்றனரென வெண்ணுவது அமையும். அவ்வுணர்வுதானும் அரிதாகிவிட்டதாதலின், ஈரமின்றி இரவலர்க்கு மறுப்பதற்குரிய வீரம் விஞ்சிய இக்காலத்தில் கடன்காரர்க் கல்லால் வாயிற்கதவினைப் பகற்பொழுது அடைப்பதற்குக் காரணமில்லை யன்றோ!

இரவு முப்பதுநாழியும் கழியாமுன் விடிந்தாலும் யாம் கண்விழியோம் என்று முன்னேயறிந்து நிச்சயஞ் செய்துகொண்டு நித்திரைக்குச் சென்றவர்போன்றவர் இமைகள்தாம் வச்சையர் மனைவாயிலைப்போல் திறவாமல் இறுகியிருக்க,

அருமணிச் சாளர மதனி னூடுபுக்
கெரிகதி ரின்றுயி லெழுப்பியேற்றவு
மருளொடு தெருளுறு நிலையர் மங்கையர்
தெருளுற மெய்ப்பொரு டெளிந்தி லாரினே

[எரிகின்ற சூரிய கிரணங்கள், அரிய இரத்தினங்களாலாகிய பலகணிகளின் வழியாய் உள்ளே நுழைந்து, இனிய தூக்கத்தினின்று எழும்படி கண்களைக் குடைந்து உணர்த்தவும், மகளிர், உண்மைப் பொருளைத் தெளிவாக அறியாதவர்கள்போல, மயக்கமும் தெளிவும் மாறி மாறி எய்துகின்ற நிலைமையர்களானார்.]

அறிவுவந்து உறத்தினாலும் முன்னைய மருட்கை மீண்டும் மீண்டும் கதுவி மாந்தரை மாயையைக் கடக்கவிடாமல் வைத்திருப்பதுபோல் சிலர், அன்று சூரிய கிரணங்கள் சாளரங்கள் வழியாகப் புகுந்து கண்ணிமைகளைக் கிளப்பியபோது, நினைவு சிறிதும் நித்திரை பெரிதுமாய்க் கிடந்தவர்களாயினார் என்னுமிது சிந்தனை செறிந்த கம்பர்தம் உவமையின் உண்மைக்கு உறைவிடமாயிருக்கின்றது.

இனி, தெளிவென்பது சிறிதேனும் இல்லாமற் றுயில்செய்த மாந்தரும் இருந்தனர் என்பதை,

அளியினங் கடந்தொறு மார்ப்ப வாய்கதி
ரொளிபட வுணர்ந்தில வுறங்கு கின்றன
தெளிவில வின்றுயில் விளையுஞ் சேக்கையுள்
களிகளை நிகர்த்தன களிநல் யானையே

[வண்டின் கூட்டங்கள், தமது கன்னங்களில் எல்லாம் மொய்த்து ஆரவாரஞ் செய்யவும், சூரியனது வெயில் தம் மேற்படவும் ஒன்றுந்தெரியாமல் உறங்கிய நல்ல மதயானைகள், இனிமையான படுக்கையில் தெளிவில்லாமல் உறங்கிக் கிடக்கின்ற கட்குடியரை ஒத்தன.]

என, யானைக்கு உவமைகொள்ளும் வாயிலால் கவி காட்டுகின்றார். இனி இவ்வாறே, ஏனைய சிலவற்றின் நிலைகள் இருந்தவண்ணமுங் காணலாம்—

விரிந்துறை துறைதொறும் விளக்கம் யாவையும்
எரிந்திழு தஃகல வொளியி ழுந்தன　189/39
அருந்துறை நிரம்பிய வுயிரி னன்பரைப்
பிரிந்துறை தருங்குலப் பேதை மாரினே.

[அரிய அகப்பொருள்துறைகளில் தேர்ந்த உயிரனைய கணவரைப் பிரிந்து வாழ்கின்ற குலமாதரைப் போல— விசாலமான வீடுகள்தோறும் வைத்திருந்த விளக்குக்கள் எல்லாம், எரிந்து நெய்குறையாமலிருந்தும், பகல் வந்ததால், ஒளிமழுங்கின ஆயின.]

புனைந்தித ழுரிஞ்சுறு பொழுது புல்லியும்
வனைந்தில வைகறை மலரு மாமலர்
நனந்தலை யமளியிற் றுயிலு நங்கைமார்
அனந்தரி னெடுங்கணே டொத்த வாமரோ.

[விடியற்காலத்தில் மலரும் சிறந்த தாமரை முதலிய மலர்கள், அழகாக இதழ் விரித்தற்குரிய சூரியோதயம் ஆகியும், மலர்ந்து அழகு செய்யாதனவாய், அகன்ற படுக்கையில் நித்திரைசெய்யும் மகளிரது நீண்ட கண்களை ஒத்திருந்தன.]

நஞ்சுறு பிரிவினை நாளி னீளமோர்
தஞ்சுற விடுவதோர் தயாவு தாங்கலால்
வெஞ்சிறை நீங்கிய வினையி னாரென
நெஞ்சுறக் களித்தன நேமிப் புள்ளெலாம்

[நீண்ட பகற்பொழுதை ஆதாரமாகக் கொண்டு தம் பிரிவினை விலக்கிக்கொள்வதாகிய ஓர் தயவைப் பெற்றமையால், சக்ரவாகப் பறவைகள், கொடிய சிறைச்சாலையிலிருந்து தமக்கு விதித்த காலத்திற்கு முன்னரே விடப்

பட்ட குற்றவாளிகளைப்போல் மனம் மிகவும் களிப்படைந்தன.]

நாண்மதிக் கல்லது நடுவ ணெய்திய
ஆணையி னீக்கலா வலரிற் பாய்வன
மாண்வினை பயன்படா மாந்தர் வாயில்சேர்
பாணரிற் றளர்ந்தன பாடற் றும்பியே

[உதித்த சந்திரனுக்கு அல்லாமல், இடையிலே செய்த யாருடைய கட்டளைக்கும் இதழ்விரியாத ஆம்பல் முதலிய பூக்களில் பாய்கின்ற இசைப்பாட்டுடைய வண்டுகள்-சிறந்த கலைத்தொழில்களின் பயனைத் தேர்ந்திராத மனிதர்களுடைய வாயிலையடைந்த பாடகர்களைப்போலத் தளர்வெய்தின]

வச்சையர் வாயில் அடைத்திருப்பினும், மாண்வினைப் பயன்படா மாந்தர் மனைவாயில் வீணர் வருகைக்குத் திறந்திருக்கும். ஆதலின் அவ்வழி பாணரும் புகலாம். ஆயினும் என்? இசைக்கடைத்த செவியுடையவர்தம் கை எங்கே திறக்கப்போகின்றது? அக்கைகளென்ன இறுகக்குவிந்த மலரருகு தும்பிகள் பாடித் தளர்வனவாயின.

ஏவலின் வன்மையை யெண்ண றேற்றலர்
நாவல ரியற்றிய நாளி னுமநூல்
காவலி னினிதுணர் கணித மாக்களும்
கூவுறு கோழியுந் துயில்வு கொண்டவே

[இராவணனது பெரிய ஆக்கினை கிரகங்களின் செலவையும் மாற்றும் ஆற்றல் உடையதென்பதை உணராத பண்டிதர்கள் இயற்றிய பிரசித்திபெற்ற சோதிட சாஸ்திரங்களைப் போற்றி நன்றாகக் கற்றிருந்த சோதிடர்களும், வைகறையில் கூவவேண்டிய கோழியும், உறங்கிக்கிடந்தன.]

இராவணனுடைய ஆக்கினைக்கு இடம் வைக்காமல், கணிக்கப்பெற்ற பஞ்சாங்கங்களை நம்பிச் சூரியோதயம் இடையே உண்டாகாது என்று உறங்கிய கணிதமாக்கள், அறிவில்லாமல் பழக்கத்தைமட்டும் பற்றி யொழுகும் கோழிகளையே ஒப்பர் என்று கம்பர் பரிகசிக்கின்றார் போலும். "கணித மாக்கள்" என்றதற் கேற்பத் "துயில்வு கொண்டவே" எனப் பலவின்பால் முடிவும் கோழியோடு சேர்த்து அவர்களுக்குக் கொடுத்தவிது, இலக்கண வமைதி எவ்வாறாயினும், சோதிடர்தம் மானத்திற்குஊனமேயாய் நிற்றல் வேண்டும். சோதிடத்திறமைக்குச்சாத்திரச்சூத்திரங்கள்மட்டுமே யல்லாமல், காலதேச வர்த்தமானங்களின் அனுபவமும் வேண்டுமென்பர். இராவணன் போன்ற வோர் போராற்றலுடையவன் இல்லாதவரையிலன்றோ, நாளும் கோளும் தத்தம் கதிப்படி நடக்கும். ஆகையால் இராவணனது ஆட்சியை எண்ணாமல் சோதிடங் கணிப்பதால் யாது பயன்? அப்படிக் கணித்த வொரு பஞ்சாங்கத்திற் குறித்த உதயகாலத்தை நிச்சயமென் றெண்ணி நித்திரைசெய்பவர் பகுத்தறிவில்லா 'மாக்களே' எனக் கம்பர் மதிக்கின்றார் ஆதல் வேண்டும். தயரதன் அவைக்கண் இருந்த கணிதபண்டிதர்கள் அவ்வினத்தவர்களுள் தலைசிறந்தவர்களாயிருந்திருப்பாரென்பதில் ஐயமில்லை. அன்னவர் குறித்துவைத்தநாளிலேஇராமனுக்குப் பட்டாபிஷேகம் நடவாமல் ஒருகூனி குலைத்துவிட்டாள் என்றால், கம்பர், சோதிட நூலின் உண்மையை மறுக்காவிடத்தும், அந்நூல்கொண்டு கணிப்பவர்களை மாக்களென்று வெறுப்பதில் வியப்பொன்றுங் காண்கிலம். முன் அயோத்தியாகாண்ட முதலில், "உரைதெரி கணிதர்" என்று 'பேச்சே பெருத்தவர்' எனப் பொருள்பட அவர்தமைக் குறித்ததும், அவர்களுடன் "பொழுது போக்கவே" தயரதன் உசாவினன் என்றதும், "கணித மாக்கள்" என்று அவர்களை அழைத்ததும், கம்பர் அன்னவர்பால் வைத்திருந்த மதிப்பு எவ்வளவு என்பதற்குச் சான்றாகின்றன.

யாப்பிலக்கணம்

[96-வது பக்கத் தொடர்ச்சி]

தொடை விகற்பம்

முன்னிதழில் மோனைக்கும் எதுகைக்கு மாவதொரு சிறப்பிலக்கணத்தைக் கற்றோம். இவ்விதழில் தொடை விகற்பங்களைக் கற்போம்:

தொடை விகற்பம் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை; மேற்கதுவாய், கீழ்க் கதுவாய், முற்று என எழுவகைப் படும். அடி மோனை முதலிய ஐந்து தொடைகளும் அடியின் தொடக்கத்தை நோக்கியவை. இத் தொடைவிகற்பங்கள் அடிதோறும் அமைந்துள்ள சீர்களை நோக்கியவை என அறிக. இத் தொடைவிகற்பங்களெல்லாம் நாற்சீரடியாகிய அளவடியில் வழங்கப்படும்.

1. இணை:—முதல் இரண்டு சீர்களில் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணை என வழங்கப் படும்.

2. பொழிப்பு:—முதற்சீரிலும் மூன்றாஞ் சீரிலும் மோனை முதலியன வரத்தொடுப்பது பொழிப்பு எனப் படும்.

3. ஒரூஉ:—இடையிலுள்ள இரு சீர்களிலுமின்றி, முதற்சீரிலும் இறுதிச் சீரிலும் மோனை முதலியவை வரத் தொடுப்பது ஒரூஉ எனப்படும்.

4. கூழை:—இறுதிச் சீர் ஒழிந்த மற்ற மூன்று சீர்களிலும் மோனை முதலியன வரத் தொடுப்பது கூழை யாம்.

5. மேற்கதுவாய்:—இரண்டாம் சீரொழிந்த மற்றச் சீர்களில் மோனை முதலியன வரத் தொடுப்பது மேற்கதுவாய் எனப்படும்.

6. கீழ்க் கதுவாய்:—மூன்றாஞ் சீரொழிந்த மற்றச் சீர்களில் மோனை முதலியன வரத் தொடுப்பது கீழ்க் கதுவாய் எனப்படும்.

7. முற்று:—நான்கு சீர்களிலும் மோனை முதலியன வரத்தொடுப்பது முற்று எனப்படும்.

(மோனை முதலிய ஐந்து தொடைகளையும் இணை முதலிய ஏழு தொடை விதற்பங்களாற் பெருக்கித் தொடை விகற்பம் முப்பத்தைந்து ஆதல் காண்க. அவற்றிற்குதாரணம் பின் வருவன.)

1. மோனை விகற்பம்

"அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி (1, 2 இணை)
அரிக்குரல் கிண்கிணி அரற்றுஞ் சீரடி (1, 3: பொழிப்பு)
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி (1, 4: ஒரூஉ)
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல் (1, 2, 3: கூழை)
அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்
(1, 3, 4: மேற்கதுவாய்)
அவிர்மதி அனைய திருநுதல் அரிவை
(1, 2, 4: கீழ்க்கதுவாய்)
அயில்வேல் அனுக்கி அம்பலைத்(து) அமர்ந்த (1, 4: முற்று)
கருங்கயல் நெடுங்கண் நோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே."

(இதனுள் இணைமோனை முதலிய ஏழும் வந்தமை காண்க.)

2. இயைபு விகற்பம்

"மொய்த்துடன் தவழும் முகிலே பொழிலே(1, 2: இணை)
மற்றதன் அயலே முத்துறழ் மணலே (1, 3: பொழிப்பு)
நிழலே இனியதன் அயலது கடலே (1, 4: ஒரூஉ)
மாதர் நகிலே வல்லே இயலே (1, 2, 3: கூழை)
வில்லே நுதலே வேற்கண் கயலே (1, 3, 4:மேற்கதுவாய்)
பல்லே தளவம் பாலே சொல்லே (1, 2, 4: கீழ்க்கதுவாய்)
புயலே குழலே மயிலே இயலே (1-4: முற்று)
அதனால்,
இவ்வயின் இவ்வுரு இயங்கலின்
எவ்வயி னோரும் இழப்பர்தம் நிறையே."

(இதனுள் இணையியைபு முதலிய ஏழும் வந்தமை காண்க. இவ்வேழு விகற்பமும் இறுதிச் சீரே முதற் சீராகக் கொண்டு வழங்கப்படும் என்பதை அறிக.)

3. எதுகை விகற்பம்

"பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்திப்
(1, 2: இணை)
பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி
(1, 3: பொழிப்பு)
மின்னிவர் ஒளிவடம் தாங்கி மன்னிய (1, 4: ஒரூஉ)
நன்னிற மென்முலை மின்னிடை வருந்தி
(1, 2, 3: கூழை)
என்னையும் இடுக்கண் துன்னுவித் தின்னடை
(1, 3, 4: மேற்கதுவாய்)
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
(1, 2, 4: கீழ்க்கதுவாய்)
கன்னியம் புன்னை இன்னிழல் துன்னிய (1-4: முற்று)
மயிலேய் சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணெம் அறிவுதொலைத் தனவே."

(இதில் இணையெதுகை முதலிய ஏழும் வந்தமை காண்க.)

4. முரண் விகற்பம்

"சீறடிப் பேரகல் அல்குல் ஒல்குபு (1, 2: இணை)
சுருங்கிய நுசுப்பிற் பெருத்துவடந் தாங்கி (1, 3:பொழிப்பு)
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து (1, 4: ஒரூஉ)
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் (1, 2, 3: கூழை)
வெள்வளைத் தோளும் சேயரிக் கருங்கணும்
(1, 3, 4: மேற்கதுவாய்)
இருக்கையும் நிலையும் எந்தெழில் இயக்கமும்
(1, 2, 4: கீழ்க்கதுவாய்)
துவர்வாய்த் தீஞ்சொலும் உவந்தனை முனியா (1-4: முற்று)
தென்றும் இன்னணம் ஆகுமதி
பொன்திகழ் நெடுவேல் போர்வல் லோயே!"

(இதில் இணை முரண் முதலிய ஏழும் வந்தமை காண்க. இத்தொடைக்கு இரணத்தொடை, பகைத் தொடை என்னும் பெயர்களும் வழங்கும்.)

5. அளபெடை விகற்பம்

"தாஅள் தாஅ மரைமலர் உழக்கிப் (1, 2: இணை)
பூஉக் குவளைப் போஒ தருந்திக் (1, 3: பொழிப்பு)
காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய் (1, 4: ஒரூஉ)
மாஅத் தாஅள் மோஒட் டெருமை (1, 2, 3: கூழை)
தேஎம் புனலிடைச் சேஒர் பாஅல்
(1, 3, 4: மேற்கதுவாய்)
மீஇன் ஆஅர்ந் துகளுஞ் சீஇர் (1, 2, 4: கீழ்க்கதுவாய்)
ஆஅ ஊஅ நீஇள் நீஇர் (1-4: முற்று)
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னவே."

(இதில் இணையளபெடை முதலிய ஏழும் வந்தமை காண்க. ஒற்றளபெடையும் இவ்வாறே அமைந்து வருமென அறிக.)

ஒரு சாரார், முரண்தொடையைக் கடை முரண், கடையிணை முரண், பின் முரண், கடைக்கூழைமுரண், இடைப்புணர் முரண் எனவும் வழங்குவதுண்டு.

அவற்றுள் கடை முரண் என்பது, அடிதோறும் இறுதிச் சீரில் மாறுபடத் தொடுப்பதாம்.

உ-ம்:—"கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே;
தடமுலை திவளும் தனிவடம் வெளிதே;
நூலின் நுண்ணிடை சிறிதே;
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே."

கடையிணை முரண் என்பது அடிதோறும் இறுதியிலுள்ள இருசீர்களிலும் மாறுபடத் தொடுப்பதாம்.

உ-ம்:—"மீன்தேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினை துழூஉம்
தண்ணந் துறைவன் தவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலம் காண்டும்
பீரோ வண்ணமும் சிறுநுதல் பெரிதே."

பின் முரண் என்பது, அடிதோறும் இரண்டாஞ் சீரிலும் நான்காஞ்சீரிலும் மாறுபடத் தொடுப்பதாம்.

உ-ம்:—"சாரல் ஓங்கிய தடந்தாள் தாழை
கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமியேம் இருந்தனம். ஆக நின்றுதன்
நலனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோள் நெகிழத்
துறந்தோன் நல்லனம் மேனியோ தீதே."

கடைக் கூழை முரண் என்பது, முதற்சீர் ஒழிந்த மற்ற மூன்று சீர்களிலும் மாறுபடத் தொடுப்பதாம்.

உ-ம்:—"காவியங் கருங்கண் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளும் அணங்குமால் எமக்கே."

இடைப்புணர் முரண் என்பது, முதற்சீரும் நான்காம் சீரும் ஒழிந்த நடு இரு சீரிலும் மாறுபடத் தொடுப்பதாம்.

உ-ம்:—"போதுவிரி குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையில் தாழ்ந்த ஓங்கல்வெள் ளருவி
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூர் இழிதரு நலங்கவர்ந்
தின்னா வாயின் இனியோர் மாட்டே."

குறிப்பு:—மோனை, எதுகை, இயைபு, அளபெடை என்னும் மற்றத்தொடை நான்கிற்கும் இவ்வாறே அமைத்து அறிக. அவை கடை மோனை, கடையிணை மோனை, பின் மோனை, கடைக் கூழை மோனை, இடைப்புணர் மோனை முதலியனவாக அமையும்.

எல்லாத் தொடையானும் செய்யுட்கள் அமைக்கப் படலாமாயினும், பெரும்பாலும் தலையாகு மோனை

யில் திரிந்தும் தலையாகு எதுகையில் திரிந்தும் தொடையமையச் செய்யு ளமைத்தல் சிறப்பன்று எனக் கொள்க.

இனி, அந்தாதித் தோடை, இரட்டைத் தோடை, செந்தோடை என்பவற்றைப் பற்றிக் கவனிப்போம்:

அந்தாதித் தோடையாவது, அடிதோறும் இறுதியில் நிற்கும் எழுத்தாயினும், அசையாயினும், சீராயினும், அடியாயினும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுப்பதாம். (அந்தம்-முடிவு; ஆதி-முதல்.)

உ-ம்:—"உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே."

(இதில் து,ப என்பன எழுத்து; மதி என்பது அசை; ஆசனம், முக்குடை என்பன சீர்; ஆசனத்... அறிவனை என்பன அடி; இச்செய்யுளிலுள்ள முதலடியின் முதற்சீரும் இறுதியடியின் இறுதிச் சீரும் உலகு என அமைந்திருத்தல் காண்க. இங்ஙனம் அமையுஞ் செய்யுளை மண்டல மயக்கந்தாதி என்பர். மண்டலித்தல்-வட்டமிடல்.)

இரட்டைத் தோடை என்பது, ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பதாம்.

உ-ம்:—"ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்."

(இச்செய்யுளின் முதலடியில் ஒரு சொல்லே அமைந்தது காண்க. இறுதிச் சொல்லில் ஏ என்னும் எழுத்துக் குறைந்தது எனினும், அது குற்றமன்று என அறிக.)

செந்தோடை என்பது, முன்னே சொல்லப்பட்ட மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும்போலாகாமல், வேறுபடத் தொடுப்பதாம். அசையும் சீரும் தம்முள் மாறுபடத் தொடுப்பது சிறப்பென அறிக.

உ-ம்:—"பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே."

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[93-வது பக்கத் தொடர்ச்சி]

இகராதி

307 இரதன் கண்ணுங் கிளியு மாகும்.
308 இராடமோர் தேசமுங் கழுதையு மாகும்.
309 இரதம் புணர்ச்சியுந் தேரு மின்சுவையும்
சூதமுங் கொள்ளியு மரைஞாணுஞ் சொல்லுவர்.
310 இருபிறப் பெயிறும் புலியும் பறவையும்
பார்ப்பா ருமெனப் பகர லாகும்.
311 [1]இலாட மோர் தேசமும் பாலமு மாகும்.
312 இலம்பக மத்தியாயமும் நுதலணியு மாகும்.
313 இலஞ்சி மாவு மகிழும் புன்கும்
எயிலு மேரியுங் குணமுங் கொப்பூழுமாம்.
314 இலயம் கூத்தும் கூத்தின் விகற்பமும்
கேடு மெனவே கிளத்தினர் புலவர்.
315 இலங்கை துருத்தியு மோருரு மாகும்.
316 இலம்பாடு வறுமையுந் துக்கமு மாகும்.
317 இலாங்கலி கலப்பையுந் தெங்கும்வெண் காந்தளும்.
318 இல்சாவு மிடமு மனையு மனையாளும்
இல்லை யென்றலு மிராசியு மாகும்.
319 இவர்த லாசையு மேவலு மெழுச்சியும்
ஏறலுஞ் சேறலு மியம்ப லாகும்.
320 இவர்வு சேறலு மெழுதலு மோசையும்
ஏறுதலுஞ் செலுத்தலு மியம்ப லாகும்.
321 இவறல் மறவியு மாசையு மாகும்.
322 இழுமென வோசையு மினிமையு மாகும்.
323 இழை யாபரணம் நூலு மாகும்.
324 இழைத்தல் கூற்று மாற்றமுஞ் செயலும்
நினைத்தலு மேவலு நிகழ்த்த லாகும்.
325 இழுக்குச் சோர்வும் பிழைத்தலு மாகும்.
326 இளியாழ் நரம்பு மிசையு மிசித்தலும்
நகையு மிணுங்குதலு முரித்தலு மாகும்.
327 இளை தலைக்காவலும் [2]வேலியும் புயலும்
இளமையுங் கிடங்கு மானு மிருநிலமுஞ்
செய்யாளுங் காடியுஞ் செப்ப லாகும்.
328 இயாளி சிங்கமு மிபமு மாகும்.
329 இளமை தண்மையுங் கோமளமுங் காமமும்.
330 இளவல் பின்றோன்றலு மேர்தலு மாகும்.
331 இளைத்த லிரங்கலு மெய்த்தலு மாகும்.
332 இறையிறை யிறுப்பு மிறைவனுங் கடனுஞ்
சிறுமையுந் தங்கலு மில்லி னிறப்புஞ்
சென்னியுந் தலைமையுங் கையிறையு மயனும்
மேலோரு மீசனும் விளம்ப லாகும்.
333 இறவை புட்டிலு மேணியு மாகும்.
334 இறலே முத்தியும் பெரிதலு மாகும்.
335 இறும்பு குறுங்காடு மலையு மதிசயமு
வனச மலருங் கானுந் தகைமையும்.
336 இறும்பூது மலையுந் தகைமையுங் குழையும்
சிறுதூறு [மதிசயமு] மறுபதமும்
காந்தட் பூவுந் தாமரைப் பூவுமாம்.
337 இறுத்த லொடித்தலுந் தங்கலு மியம்பலும்.
338 இறத்தல் கடத்தலுஞ் சாதலு மிகுதியும்.
339 இறப்பு மிகுதியுஞ் சாவும் போக்கும்
இல்லி னிறப்பு மியம்ப லாகும்.
340 இறால் தேன்கூடு மீனு மெருதும்
கார்த்திகை யுமெனக் கழற லாகும்.
341 இனமிருங் கிளையு மமைச்சரு மாகும்.

இகரவர்க்கம் முற்றிற்று

ஈகார வர்க்கம்

342 ஈகை பொன்னும் வழியுங் கொடையும்
இல்லா மையுங் கற்பகமு மீங்கையும்.
343 ஈடு குழைவும் வலியும் பெருமையும்
ஒப்பு மெனவே யுரைக்க லாகும்.
344 ஈண்டிவ் விடமு மிவ்வாறுஞ் சடுதியும்
ஈங்கையு மெனவே யிசைக்க லாகும்.
345 ஈம மயானமு மெரியிலிடு கலமும்
காட்டமு மெனவே கழற லாகும்.
346 ஈய லிந்திர கோபமுஞ் செ[ல்]லும்.
347 ஈரம் வனப்பு மன்புங் குளிர்ச்சியும்
அறிவுமெலு மிச்சும் பகுத்தலு மாகும்.
348 ஈரே கதுப்பு மீரு மாகும்.
349 ஈழங் கள்ளும் பொன்னுமோர் தேசமும்.
350 ஈறே முடிவும் பயனு மாகும்.
351 ஈன்றான் பிரமனுந் தாதையு மாகும்.
352 ஈமொழியு மெள்ளலும் ஈயு மாகும்.

(பிரதி)—1 இலாப. 2. அறிவிலியும்.

கலித்தொகை

[85-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 4.

[தலைவன் பொருள்தேடும்பொருட்டுப் பிரியப்போவதை அறிந்ததோழி அவனையடைந்து, "நீர் கடத்தற்கரியகாட்டைக் கடந்து சம்பாதிக்கும் பொருளைக்காட்டிலும் யாங்கள் உமக்குச் சிறந்தவர்கள் என்ற எண்ணம் உம்முள்ளத்தில் இருக்குமாயின், தீய நாள்களும் கிரகங்களும் நட்சத்திரங்களும் உம்மைப் போகவிடாமல் தடைசெய்யும். அன்றியும் நீர் பிரியின், அந்நாளே இங்குத் தலைவியின் உயிரைக்கொண்டு செல்லும்" என்று சொல்லி, அவன் போக்கை நிறுத்தியதைக் கூறுவது இச்செய்யுள்.]

பாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர் பட்ட வாறுமயங் கருஞ்சுர
மிறந்துநீர் செய்யும் பொருளினும் யாநுமக்குச்
சிறந்தன மாத லறிந்தனி ராயி
னீளிரு முந்நீர் வளிகலன் வெளவலி
னாள்வினைக் கழிந்தோர் போற லல்லதை
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவ
நாளுங் கோண்மீன் றகைத்தலுந் தகைமே!

கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபிற்
[வாளோ!
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமை

ஆள்பவர் கலக்குற வலைபெற்ற நாடுபோற்
பாழ்பட்டமுகத்தோடு பைதல்கொண்டமைவாளோ!

ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ணீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ!

எனவாங்கு

போய்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வ
தந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே!

(தரவு)

(வரி. 1-9) பாஅல் அம் செவி-பலபகுதிகளைக் கொண்ட அழகிய காதுகளையும், பணை தாள்-பருத்த கால்களையும் உடைய, மாநிரை-பெருங் கூட்டமாகிய, மாஅல் யானையொடு - மயக்கங் கொண்ட யானைகளோடு, மறவர்-மறவரும், மயங்கி-கூடிய காரணத்தால், தூறு அதர்பட்ட - புதர்கள் எல்லாம் வழிகள் ஆகிய, ஆறு மயங்கு அருஞ்சுரம் - பழைய வழிகள் மாறுபட்ட கடப்பதற்கு அருமையாகிய காட்டை, இறந்து - கடந்து, நீர் செய்யும் பொருளினும் - நீர் சம்பாதிக்கும் பொருளைக்காட்டிலும், யாம் - யாங்கள், நுமக்கு சிறந்தனம் ஆதல் - உமக்குச் சிறந்தவர்களாய் இருத்தலை, அறிந்தனிர் ஆயின் - நீர் அறிந்து இருப்பீரானால், நீள் இரு முந்நீர் - நீண்ட பெரிய கடலிலே, வளி - காற்றானது, கலன் வெளவலின் - தம் கப்பலைச் சிதற அடிப்பதால், ஆள் வினைக்கு அழிந்தோர் போறல்-(தாம் எடுத்துக் கொண்ட) முயற்சி கெடுதல் காரணமாக வருந்துபவரைப் போல, அல்லதை - (யாங்கள் வருந்துவதே) அல்லாமல், கேள் பெருந்தகையோடு - தலைவரும் பெரியரும் ஆகிய நும்மொடு, எவன் பல மொழிகுவம் - எங்ஙனம் பல வார்த்தைகளைச் சொல்லுவோம், நாளும் கோள்மீன் - தீய நாள்களும், கிரகங்களும், நட்சத்திரங்களும், தகைத்தலும் தகையும் - (நும்மை) தடுக்கவும் தடுக்கும்.

(தாழிசை)

(வரி. 10-11) கல் என - கல் என்னும் ஓசை உண்டாக, கவின்பெற்ற விழா - அழகு பெற்ற திருவிழாவை, ஆற்றுப் படுத்த பின் - நடத்திய பின்நாள், புல் என்ற களம்போல - (தோன்றும்) பொலிவு அழிந்த இடம்போல, புலம்பு கொண்டு - தனிமை யடைந்து, அமைவாளோ - (தலைவி துக்கத்தை அடக்கிக்கொண்டு) இருப்பாளோ! (இறந்தேவிடுவாள்.)

[திருவிழாவினால் சிறப்பினைப் பெற்ற இடம் அவ்விழா நீங்கி மறுமுறை வருகின்ற வரையிலும் தனிமை கொண்டு அழியாமல் இருப்பது போல, நீர் பொருள் தேட நீங்கித் திரும்பும் அளவும் தலைவி உயிரோடு இருக்கமாட்டாள்.]

திருவிழா நடக்கின்ற இடம் பெரிதும் அழகுடன் விளங்கும். அவ்விழா முடிந்த மறு நாள் அங்குப் போவார் இல்லாமையால் அது சுடுகாடு போலத் தோன்றும். அதனால் புல்லென்ற களம் என்றார்.

(வரி. 12-13) ஆள்பவர் கலக்குற - நாட்டை ஆள்கின்ற அரசர் கலக்க, அலைபெற்ற நாடுபோல்-துன்பத்தைப்பெற்ற நாட்டைப் போல, பாழ்பட்ட முகத்தோடு-அழகுகெட்ட முகத்தோடு, பைதல் கொண்டு-வருத்தத்தோடு, அமைவாளோ - (தலைவி) பொருந்தி இருப்பாளோ? (இறந்தேவிடுவாள்.)

[ஆள்கின்ற அரசர் கலக்கப் பொலிவிழந்த நாடு, நல்லரசர் வருமளவும் அடியோடு அழியாமல் இருப்பதுபோல், நீங்கி நீர் திரும்புமளவும் தலைவி உயிரோடு இருக்க மாட்டாள்.]

(வரி. 14-15) ஓர் இரா வைகலுள் - ஓர் இரவுப் பொழுதில், தாமரைப் பொய்கையுள் - தாமரையையுடைய தடாகத்தில், நீர் நீத்த மலர் போல - நீர் இல்லாதமலர் (அந்தஇரவுமுழுவதும் அழியாமல்இருப்பது) போல, நீ நீப்பின் - நீ பிரிவாயானால், வாழ்வாளோ-உயிரோடு (தலைவி) இருப்பாளோ! (இறந்தேவிடுவாள்)

[பொய்கையிலுள்ள நீர் ஓர் இரவு முழுவதும் நீங்கி மறுநாள் வருமளவும் அதிலுள்ள தாமரைப் பூ வாடாமல் இருப்பது போல, நீங்கி நீர் திரும்புமளவும் தலைவி அழியாமல் இருக்க மாட்டாள்.]

(வரி. 16) என - என்று நான் சொல்லும்படி,
ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 17-19) நெடுந்தகாய் - பெரியோய், பொய் நல்கல் புரிந்தனை-பொய்யாகிய அன்பைச் செய்து, புறந்தரல் கைவிட்டு - (இவளைக்) காப்பாற்றுதலைக் கைவிட்டு, நீ செல்வது எ நாளோ - நீ (விரும்பிய காட்டிலே) செல்வது எந்த நாளோ, அ நாள்-அந்தநாளே, இவள் அரும் பெறல் உயிர் - இவளுடைய பெறுவதற்கு அருமையாகிய உயிரை, கொண்டு இறக்கும் - கொண்டு சென்றுவிடும்.

கதிரைமலைக் காதல்

முன்னுரை:—

இக் "காதல்" ஏட்டுப்பிரதியில் உளதாம். மனப்பாடமாய்க் கற்றிருந்த ஒருவரிடமிருந்து யான் இதனைப் பெற்றேன். அவ்வரலாறு வருமாறு:—

மாயைதரு சூரன்றன் வலிகெடுத் தமரரை வாழ்விக்க வந்தவொரு செல்வ வடிவேலன் வள்ளியொடு வாழ்கின்ற கதிரையங் கிரியினை வந்திக்க வெண்ணி யடியேன் ஆசையுட னவணேகி யப்பனிரு தாண் மலரை யன்பினுட னேத்தியேத்தி யழுதழுது நிற்கின்ற வமயத்தி லோரடியார் அக்குமணி மார்பர் தேசுமலி மேனியர் செங்காவி யுடையர், சிவசிவா வென்னுநல் வாயர், செங்கைவடி வேலனுக்கு நற்றொண்டு செய்கின்ற மெய்ம்மையன்பர்; வாசமலி கற்பூர வடிவிளக்கேந்தியே வள்ளலிரு பாதமேத்தி, வடிவுடைய விக்காத லடியனுக் கருகாக வந்துநின் றோதவே, நானும், பூசனை புரிந்தநற் புண்ணியப் பலனெனப் புலன்களை யடக்கியின்பமிகப் பொழிகின்ற பாமாலை கேட்கின்ற நேரமே, பொறிநின்ற மஞ்ஞையூர்தி மாசற்ற செஞ்சோதி வடிவினைக் கண்டிந்த மண்ணில்யான் பெற்றநல் மானுடத் தேகத்தி னுயபய னீதென்று மண்ணின்மேல் வீழ்ந்தெழுந்து காசுற்ற மும்மலக் கட்டற்ற பெரியவர் கானுற்றெ னன்புகாட்டிக் கடையேனு முய்ந்திடக் காதலிவை சொற்றிடக் காதல்புரி என்றவேண்ட, "ஈசனே யுன்கருணை யீதுகொல்" என்றேத்தி யிக்காதல் சொல்லயானு மெழுதினேன். எங்கலாநிலயத்தி லிதனைநீ ரினிது வெளிப்படுத்த வேண்டுகின்றேன்.

க. வேலுப்பிள்ளை

காப்பு

சீர்விளங்குங் கதிரைமலைக் குமரேச
னிருபதமென் சென்னி சேர்த்துப்
பேர்விளங்கு காதலிசை பாடுவதற்
கைங்கரத்தோன் பிறைகங் காளம்
தார்விளங்குஞ் சடையோனு முமையவளும்
நாரணனுஞ் சலச மாதும்
கார்விளங்கு மலரயனுங் கலைமகளும்
வடிவேலுங் காப்புத் தானே.

நூல்

சீராருந் தென்கதிரைச் செல்வனரு ளாலே
பேராருங் காதலிசை பெட்புடனே பாடுதற்கு
வேதக் கதிரைமலை வேலவரைத் தெண்டனிட்டுக்
காதல்சொலத் தந்திமுகக் கற்பகமுங் காப்பாமே,
சங்கத்தமிழ் தெரிந்து தாரணியிற் காதல்சொல்ல
திங்கள் சடைமுடித்த தேவனருள் தந்திடுமே,
பன்னு தமிழாலே பரிந்தடியேன் காதல்சொல்ல
அன்னையுமை யென்னைவளர்த் தாதரவு செய்திடுமே,
தோத்திரமாங் காதலிசை சொற்பிழைகள் குற்றமெலாம்
தீர்த்தருளச் சண்முகனைத் தெண்டனிட்டுக் கொண்டே
பரவுந் திருத்தமிழாற் பாருலகிற் காதல்சொல்ல [னே,
பிரமன் கருணைவெள்ளம் பெய்துவினை தீர்த்திடுமே,
தெள்ளு தமிழிற் சிறந்தடியேன் காதல்சொல்ல
வள்ளியம்மைத் தாயார் மகிழ்ந்திரக்கஞ் செய்திடுமே,
நாவிற்கிசைந்த நற்சொல் நாணிலத்தி லோதுதற்குத்
தேவானைத் தாயார் சிறந்தநன்மை தந்திடுமே,
பண்புறையும் வேலர் திருப்பாராட்டுக் காதல்சொல்லத்
தென்பயிலும் பூமகளுஞ் சீராட்டுச் செய்திடுமே,
கதிரைக் குருபரனைக் கைதொழுது காதல்சொல்ல
மதுரக் கவிக்கிசைய வாக்குதவும் நாமகளே, [லாம்
பார்த்தடியேன் சொன்னதமிழ்ப் பாவிலுள்ள குற்றமெல்
தீர்த்தருளச் சண்முகனைத் தெண்டனிட்டுக் கொண்டே
தேவானை பங்கன் திருவடியைப் போற்றுமல் [னே,
மாபாவி யாகிவலு நரகுக் காளானேன்,
கந்தமலைத் தென்கதிரைக் கந்தனைநான் போற்றுமல்
பந்தவினை தொந்தவலைப் பாசமதிற் பட்டுவிட்டேன்,
திருந்துங் கதிரைமலைச் செவ்வேளைப் போற்றுமல்
வருந்தி வறுமையினல் மாட்டாங்குப் பட்டுவிட்டேன்,
விண்ணோர் தொழுங்கதிரை வேலவனைப் போற்றுமல்
மண்ணாசை கொண்டுலகில் வாழ்வை மதித்துவிட்டேன்,
காக்குங் கதிரைமலைக் கந்தனைநான் போற்றுமல்
நீர்க்குமிழி வாழ்வை நிலையாமென் றெண்ணிவிட்டேன்,
நாயகமாந் தென்கதிரை நாயகனைப் போற்றுமல்
மாஞால வாழ்வை வலிதென்று நம்பிவிட்டேன்,
கானக் குறத்தி கணவனைநான் போற்றுமல்
ஈனமுற்ற சென்மத்தி லிடரிடுக்கண் பட்டுவிட்டேன்,
மஞ்சார் மயில்வாகன் வள்ளிமண வாளனைநான்
நெஞ்சார வாழ்த்துகின்ற நேசமதை விட்டுவிட்டேன்,
தேவர்தொழுந் தென்கதிரைச் செவ்வேளைப் போற்றுமல்
பாவப் புழுவுடலைப் பாவித் திருந்துவிட்டேன்,
புல்லறிவைத் தானினைந்து பொய்களவைத் தான்விரும்பி
நல்லறிவைத் தான்மறந்து நடந்தேனிக் காலமெல்லாம்,
போதகத்தை யுச்சரியாப் புல்லறிவு நாயேனும்
பாதகத்துக் கன்னைமுலைப் பாலருந்தி யேவளர்ந்தேன்,
பேய்க்கோலங் கொண்டே பேய்வாழ்வுக் கேம்பலித்து,
நாய்க்கோலங் கொண்டே நடந்தேனிக் காலமெல்லாம்,
எத்திசையும் போற்றுகதி ரேசனைநான் போற்றுமல்
குத்திரங்கள் கற்றுக் குலைகுலைந்து விட்டேனே,
கலஞ்சேருந் தென்கதிரை நாயகனைப் போற்றுமல்
புலன்போம் வழிவழியே போயலைந்து போனேனே,
மறையை மறையவரை மாயவனை யைங்கரனை
முறையத் திறம்பேசி மோசமதாய்ப் போனேனே,

(தொடரும்)

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0



தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக ,,	0-12-0
பிருங்காமலக ,,	0-12-0
ஸ்திரீகளுக்கு	
ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்போடி"

சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டீ.மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்த திறமணக்கு எண்ணெ காஸ்ட்ராலகஸ்

ஜ்வரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி

நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும் (வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசகசாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்வானாய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட 19 பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், குவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர் சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM c. c. s.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM
Purasawalkam, Madras.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இளைவிளைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுரான ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அல்மரச் செய்யலர்மோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B .A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஷாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

சோவியத் ருஷியா:—உரிமையின் பெருமிதத்தில் திகழ்கின்ற சோவியத்ருஷியாவில் ஸெபாஸ்டபூல் என்னுமிடத்தில் ஜனங்களுக்கு உணவுப்பொருளைப் பங்கிட்டுக்கொடுக்க நியமிக்கப்பெற்றிருந்த 6 ருஷிய உத்தியோகஸ்தர்கள் அவர்கள் முறைப்படி உணவுப் பொருள்களை ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்காத குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பெற்றனர் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

நியூயார்க்கில் இளைஞர் நிலை:—செல்வத்திலும் கைத்தொழில்வர்த்தகம் ஆகியசெழுமையிலும் கொழிப்பதாகச்சொல்லப்படும் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் 16 வயதிற்கு மேல் 21 வயதிற்குட்பட்ட 5000 வாலிபர்கள் பிழைப்பிற்கு வழியில்லாமலும் வீடுவாசலில்லாமலும்இருக்கின்றனராம். அவர்களது நிலையைச் சீர்திருத்தவும் அவர்களுக்கு உத்தியோகங்கள் சம்பாதித்துக் கொடுக்கவும் ஒரு கமிட்டியை அமெரிக்க தேயத்து அரசாங்கத்தார் நியமித்திருக்கின்றனராம்.

மேலும், அமெரிக்காவில் வேலையில்லாமல் அநேகர் கஷ்டப்படுவதால் அங்குள்ள உத்தியோக நிலயங்களிலும் தொழிற்சாலைகளிலும் 35 வயதிற்கு மேற்பட்ட ஆடவர்களையும், 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களையும் உத்தியோகத்தில் சேர்த்துக்கொள்வதில்லையாம். இல்லாதவர்களுக்கு உவந்தீயும் குணமுடையவர் இருப்பரேல் இந்நிலை ஏற்படாது. கமிட்டியும் முயற்சியும் வேண்டியிரா. இரக்கமுடையார் இல்லாத விடத்தில் சராசரிக் கணக்குச் செல்வம், எல்லாம் மக்களுக்கு எதையும் புரிந்துவைக்காது.

***

மேயர் பதவி:—இதுவரை இந்தியாவில் பம்பாய் கல்கத்தா முனிசிபாலிட்டித் தலைவர்களுக்குத்தான் மேயர் என்னும் பட்டம் அளிக்கப்பட்டிருந்தது. சென்றவாரம் கூடிய சென்னைச்சட்டசபையில் சென்னை முனிசிபல் தலைவருக்கும் மேயர்பட்டம் அளிக்கச் சட்டம் செய்யப்பட்டது. இனி, சென்னைமுனிசிபல் தலைவர் மேயர் என்று அழைக்கப்படுவார்.

***

கலியாணச் சட்டம்:—இத்தாலியில் இப்பொழுது அரசியல் ஆதிக்கம் பெற்றுள்ள பாஸிஸ்டு கட்சியின் ஜனத்தொகையை வளர்ப்பதற்காக இத்தாலிய அரசாங்கத்தார் ஓர் சட்டம் செய்திருக்கின்றார்கள். நடக்கின்ற 1933-வது ஆண்டில் கலியாணம் செய்துகொள்ளும் பாஸிஸ்டு கட்சியினருக்கு அச்சட்டப்படி 15பவுன் இனும் அளிக்கப்படுமாம். ஏழைகளாயிருக்கும் பாஸிஸ்டு வாலிபர்களைக் கலியாணம் செய்துகொண்டு மக்களைப்பெற்றுப் பாஸிஸ்டு கட்சியைப் பலப்படுத்தும்படி தூண்டவே இச்சட்டம் செய்யப்பெற்றதாம்.

***

சுகாதார இலாக்கா அறிக்கை:—சென்னைச் சுகாதார இலாக்கா டைரக்டர், சென்னை மாகாணத்தின் சுகாதார நிலையைப்பற்றிப் பின்வருமாறு அறிவித்திருக்கின்றார்:—ஜனவரிமாதத்தில் சென்னை மாகாணத்தில் 9 பேர் காலரா நோயின் வயமானர். அவர்களில் 6 பேர் இறந்தனர். 678 பேர் வைசூரி போடப்பெற்றனர்; அவர்களில் 136 பேர் இறந்தனர். 46 பேருக்குப் பிளேக் கண்டது. அவர்களில் 29 பேர் இறந்தனர்.

கஞ்சம், திருச்சி, தஞ்சை, மதுரை, ராமநாதபுரம், தென்கன்னடம் ஜில்லாக்களில் காலரா பரவிவருகின்றது. ராமநாதபுரம், மதுரை, சித்தூர், கஞ்சம், தென்னாற்காடு, தஞ்சை ஜில்லாக்களில் வைசூரி பரவியுள்ளது. எனினும் இப்பொழுது நோய் குறைந்து வருகின்றது. பல்லாரி, மதுரை, மலையாளம் சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் பிளேக் வியாதி பரவுகின்றது.

சுகாதார அதிகாரிகள் இந்நோய்களைத் தடுப்பதற்கான முயற்சி செய்துவருகின்றனர். பொதுஜனங்களும் அதிகாரிகளுக்குக் கூட்டுறவு தரவேண்டும். எல்லோரும் அம்மை குத்திக்கொள்ளவேண்டும். காலரா பரவும் இடங்களில் இருப்பவர் இனாகுலேஷன் செய்துகொள்ளவேண்டும்.

***

விவாகரத்து மசோதா:-ஹரிசிங்கவர் என்பவர் இந்து மாதர்களை விவாகரத்து செய்து கொள்ள அனுமதிக்கக் கூடிய ஒரு மசோதாவைத் தயாரித்து இந்தியச் சட்டசபைச் செலக்ட்கமிட்டியின் யோசனைக்கு விடுத்துள்ளார் என்று தெரிகின்றது. இது சட்டமாயின் மாதர்கள் வெகுதூரம் முன்னேற்ற மடைந்தவர்களாவார்களென்றும் ஹரிசிங் கவரின் பேரும்அழியாப் புகழுடன் தழைக்கும் என்றும் கருதுவாரும் உளர்.

***

சைவ சித்தாந்த சங்க ஆண்டு விழா:—சைவ சித்தாந்த சங்க ஆண்டு விழா ஒன்று திருநெல்வேலியில் பிப்ரவரி மாதம் 4, 5 தேதிகளில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தலைமையில் கூடிற்று, அவ்விழாவில் அறிஞர் பலர் சொற்பொழிவாற்றினராம்.

***

இந்தோ கம்மர்ஷியல் பாங்:—ஸ்ரீமான் S. N. N. சங்கரலிங்க ஐயர் அவர்களை மானேஜிங் டைரக்டராகக் கொண்டு மாயவரத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற இந்தோ கம்மர்ஷியல் பாங்கின் பிராஞ்சு ஒன்று இம்மாதம் 9-ந் தேதி கும்பகோணத்தில் ஆரம்பமாகும் என்று தெரிகின்றது.

***

தென்னாட்டுக்கலை:—தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இப்பொழுது இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்யும் மிஸஸ் ஹமீத் ஆலி என்னும் மாது தமது தென்னாட்டு அனுபவத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:—"தென்னாட்டுக் கோவில்களைப்போன்ற அற்புதம் நான் கண்டதில்லை. அவைகளின், அமைப்பும், பிராகாரச் சிறப்பும் வானமளாவிய கோபுரங்களும், சிற்பச் சிறப்பும் என்னைக் கவர்ந்துவிட்டன. ஸ்ரீரங்கத்தின் சிறப்பைக்கண்டு அனுபவிக்க நான் பாக்கியம் பண்ணவில்லை. ஆனால் மீனாக்ஷியம்மன் கோவிலைப் பார்வையிட்டுப் பிரமித்துப் போனேன். திருமலைநாய்க்கர் மஹாலைக் கண்ட நான் அவ்விடம்விட்டுப் பெயர மனமில்லாமல் நின்று விட்டேன். இந்தியாவே சிற்பக்கலை நுணுக்கத்தில் சிறந்தது. தென்னாடோ அதனினும் சிறந்திருக்கின்றது என்று முடிவாய்க் கூறுவேன். மேனாட்டார் நமது சிற்பக் கலையைக்கண்டு வியக்கின்றனர் எனினும், நாமோ நமது கலையின் சிறப்பை அறியாமல் இருக்கின்றோம். நமது சிறுமைநிலைமைக்குக் காரணம் கலையினிடம் நம் மனம் ஒன்றாதிருப்பதே. அழகினை அனுபவிக்க நமக்குக் கண்ணில்லாமற்போனது நமது துரதிருஷ்டமே"

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு
முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆசியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— 'கலா நிலயம்', வேளாளர் வீதி, புரசை, சென்னை.

89139

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸௌப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931
for over ... ... Rs. 1,32,33,000
Showing an increase over
the New Business figure
for 1930 of ... ... 16.54 %
Claims paid up to end of
1931 over ... ... Rs. 90,00,000
Invested Funds amount to over Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumarjah, B.A., B.L. (Editor)